1366
1366
1316

# NEW ERA TAMIL READER

## THIRD BOOK

3099
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1939
MADRAS

V. CHIDAMBARA RAMALINGA PILLAI

S. R. SUBRAMANIA PILLAI
EDUCATIONAL PUBLISHER
TINNEVELLY JN.

As. 4½

# NEW ERA TAMIL READER

# நவீன
# தமிழ்ப் பாட புத்தகம்

## மூன்றும் வகுப்பு

1309
1344
494·8U86

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1939
MADRAS

வி. சிதம்பரராமலிங்க பிள்ளை
தமிழ்ப் போதகாசிரியர்
மதுரைத் திரவியம் - தாயுமானவர் இந்து கலாசாலை
திருநெல்வேலி

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
திருநெல்வேலி ஜங்ஷன்

பதிவு செய்யப்பட்டது ]

[ விலை அணா $4\frac{1}{2}$

முதற் பதிப்பு: 1939

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி

# முன்னுரை

'நவீன தமிழ்ப் பாட புத்தகம்' என்னும் புத்தக வரிசை இப்பொழுது புதிதாகச் சென்னை வித்யா இலாகா அதிகாரிகள் வெளியிட்டிருக்கும் பாடத்திட்டத்தை அநுசரித்து எழுதப்பட்டிருக்கிறது. சிறு பிள்ளைகளுக்குப் படங்களைப் பார்ப்பதிலேயே விருப்பம் இயற்கையாகச் செல்லும். ஆகையால் முதற் புத்தகத்தில் சிறுவர்கள் வீட்டிலும், சுற்றுப்பக்கங்களிலும் பார்த்தும் கையாடியும் பழகியுள்ள பொருள்கள் பட ரூபமாக முதலில் காட்டப்பட்டிருக்கின்றன. பின்பு பொருள்களின் படங்களும் அவற்றின் பெயர்களும் காட்டப்பட்டிருக்கின்றன. இதனால் முன் படத்தை மட்டும் பார்த்த பிள்ளைகள் இப்பொழுது படத்தோடு எழுத்துக்களையும் கவனிக்கிறார்கள். பின்பு அவர்கள் படித்த வார்த்தைகளை எழுதுவதற்கு உபயோகமாக அப்பியாசங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் அவர்கள் முன் படித்த எழுத்துக்களை எழுதி அப்பியாசம் செய்தல் வேண்டும். பின்பு சில எளிய பாடங்களும், கதை விளக்கப் படங்களும் பாட்டுக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டு மூன்று முதலிய புத்தகங்களில், புதுப் பாடத் திட்டத்தை அநுசரித்து நூதன வார்த்தைகள் படிக்கிரமமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சிறுவர்கள் மனத்தைக் கவரும்படியாகப் பாடங்கள் எல்லாம் கதைகளாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கதைகள் அவர்களுக்கு நீதியையும், உலக அறிவையும், இயற்கைப் பொருள் ஞானத்தையும் உண்டாக்கும்படியான முறையில் வரிசைப் படுத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாடத்தின் ஆரம்பத்திலும் அப்பாடத்தில் வரும் சில முக்கியமான புதிய வார்த்தைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இன்றியமையாத கேள்விகளும் அப்பியாசங்களும் பாடத்தின் இறுதியில் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

ஆகவே, இப்புத்தகங்கள் மாணக்கர்களுக்கு நமது வித்யா அதிகாரிகள் கொடுக்க விரும்பும் பாஷா ஞானத்தை எளிதில் கொடுக்குமென்று நம்புகிறேன்.

திருநெல்வேலி }
10—11—39. }

வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை,
தமிழ்ப் போதகாசிரியர்.

## பொருளடக்கம்


| எண் | பாடம் | பக்கம் |
|---|---|---|
| 1. | ராய ராஜாவும் மந்திரிகளும் .... .... | 1 |
| 2. | பூக்கள் ராஜா ஏற்படுத்தியது .... .... | 3 |
| 3. | ஜீவகாருணியம் .... .... | 5 |
| 4. | கெடுவான் கேடு நினைப்பான் .... .... | 7 |
| 5. | இருதலை மணியன் .... .... | 9 |
| 6. | நிலாப் பாட்டு .... .... | 11 |
| 7. | அறிவுள்ள நாய் .... .... | 13 |
| 8. | குரங்குகளும் குல்லா வியாபாரியும் .... .... | 15 |
| 9. | நரியும் மத்தளமும் .... .... | 17 |
| 10. | காகமும் பாம்பும் .... .... | 19 |
| 11. | அதிசயமான வீடு .... .... | 22 |
| 12. | சிநேகத்தின் உயர்வு .... .... | 25 |
| 13. | உண்மை .... .... | 28 |
| 14. | பேராசைச் சிறுவன் .... .... | 31 |
| 15. | தாலாட்டு .... .... | 34 |
| 16. | மூக்கறையன் கதை .... .... | 36 |
| 17. | தெனாலி ராமனும் திருடர்களும் .... .... | 38 |
| 18. | தூக்கணங் குருவியும் குரங்கும் .... .... | 41 |
| 19. | குருவியும் பாயசமும் .... .... | 44 |
| 20. | நல்லபையனும் கெட்டபையனும் .... .... | 46 |
| 21. | கிழவனும் மூன்று குமாரர்களும் .... .... | 48 |
| 22. | நல்லொழுக்கம் .... .... | 50 |
| 23. | மரம் சாக்ஷியானது .... .... | 53 |
| 24. | புத்தியில்லாத ஆமை .... .... | 56 |
| 25. | சோம்பேறிச் சோமாசி .... .... | 59 |
| | ஆத்திசூடி .... .... | 62 |
| | கொன்றை வேந்தன் .... .... | 64 |



## 1. ராய ராஜாவும் மந்திரிகளும்

| | | |
|---|---|---|
| ஆந்திர தேசம் | அனிச்சம் | திவ்வியம் |
| சவாரி | சந்தோஷம் | முத்து |
| மந்திரி | அவசரப்பட்டு | விடை |
| ஏரி | அமிர்தம் | இடை வழி |
| கரை | நிரம்பவும் | வெட்கம் |
| புத்திசாலி | விளங்குகிறது | யோசித்து |
| தாமரை | அல்லி | ஜலம் |

1. ஒரு காலத்தில் ராயர் என்ற அரசர் ஆந்திர தேசத்தை ஆண்டு வந்தார். ஒரு நாள் அந்த ராஜா குதிரை மேல் ஏறிச் சவாரி போனார். அப்பொழுது அவருடைய மூன்று மந்திரிகளும் அவருடன் சென்றார்கள். இவ்விதம் அவர்கள் போகும்போது இடை வழியில் ஓர் ஏரி இருந்தது. அதன் கரை மேலாக எல்லாரும் குதிரைகள் மேல் சவாரிசெய்து போனார்கள்.

2. ஏரி நீர் நிறைந்து இருந்தது. தாமரை, அல்லி, அனிச்சம் முதலிய பூக்கள் அதில் மலர்ந்திருந்தன. ராய ராஜா அந்த ஏரியைப் பார்த்து மிகவும் சந்தோஷம் கொண்டார். அவர் தம்முடைய மந்திரிகளைப் பார்த்து, 'இந்த ஏரி ஜலம் எப்படி இருக்கிறது?' என்று கேட்டார்.

3. ஒரு மந்திரி அவசரப்பட்டு, 'மகா ராஜாவே, இந்த ஏரியின் ஜலத்தைப் பற்றி என்ன சொல்ல? ஜலம் அமிர்தம் போலத் திவ்வியமாய் இருக்கிறது' என்றான்.

4. ராஜா மற்றொரு மந்திரியை நோக்கினார். அந்த மந்திரி, 'அரசரே, இந்த ஏரியின் ஜலம் முத்துப்போல இருக்கிறது. இது போன்ற ஜலம் வேறு எங்கும் காண முடியாது' என்றான்.

5. முடிவில் ராஜா தமது முதல் மந்திரியைப் பார்த்தார். அந்த மந்திரி அவசரப்படாமல் சற்று யோசித்து, 'மன்னரே, இந்த ஏரி ஜலம் எப்படி இருக்கிறது என்றால் ஏரி கரையால் இருக்கிறது. கரை இல்லை என்றால் ஏரியில் ஜலம் இராது' என்று சொன்னான்.

6. ராஜா முதல் மந்திரி சொன்ன விடையைக்கேட்டு நிரம்பவும் சந்தோஷம் கொண்டார். மற்றை இரண்டு மந்திரிகளும் வெட்கம் கொண்டு தலை குனிந்தார்கள்.

### கேள்விகள்

1. ராய ராஜா எந்தத் தேசத்தை ஆண்டு வந்தார்?
2. அவருடன் யார் வந்தார்கள்?
3. மந்திரிகளிடம் ராஜா கேட்ட கேள்வி என்ன?
4. ஒவ்வொரு மந்திரியும் சொன்ன பதில் என்ன?

### அப்பியாசம்

1. ராயர் ஓர் அரசர். அவர் ஆந்திர தேசத்தை ஆண்டு வந்தார். — இரண்டு வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக்கு.

2. ராய ராஜா ஏரியைப் பார்த்து........................வாக்கியத்தைப் பூர்த்தி செய்.



## 2. பூக்கள் ராஜா ஏற்படுத்தியது

| | | | |
|---|---|---|---|
| தீர்மானம் | மணம் | முட்செடி | தடாகம் |
| உடையவன் | அன்பர் | சண்டை | பெருமை |
| தாழம்பூ | பூக்கள் | கூடின | கைகொட்டி |
| காலம் | அழகான | பெரியவன் | வரவேற்பு |

ஒரு காலத்தில் பூக்கள் எல்லாம் ஒன்றுகூடின. 'நமக்கு ஒரு ராஜா வேண்டும்' என்று அவைகள் தீர்மானித்தன.

சில பூக்கள், 'எங்களுக்கு மணம் அதிகம்: நாங்கள் ராஜா ஆகவேண்டும்' என்றன.

சில பூக்கள், 'நாங்கள் அழகான பூக்கள்: நாங்களே ராஜா ஆகவேண்டும்' என்றன.

சில பூக்கள், 'நாங்கள் பெரிய பூக்கள் : நாங்களே ராஜா ஆகவேண்டும்' என்றன.

ரோஜா, 'நான் அழகும் மணமும் உடையவன்' என்றது. அல்லி, 'நானும் அழகும் மணமும் உடைய வன். அதனேடு உன்னைப் போல நான் முட்செடியில் உண்டாகவில்லை. எனக்கு முள்ளும் இல்லை. அழகிய தடாகத்திலே வளர்கிறேன்' என்றது.

தாழம்பூ, 'நான் அழகும் மணமும் உடையவன். அதோடு நான் பெரியவன்' என்றது.

கடைசியாகத் தாமரை, 'அன்பர்களே, ஏன் நீங்கள் சண்டையிட வேண்டும்? நீங்கள் பேசுகிற அத்தனை பெருமையும் எனக்கு உண்டு. ரோஜாவின் மணமும் அழகும் எனக்கு உண்டு. அல்லியைப் போலத் தடாகத்தில் வளர்கிறேன். தாழம்பூவைப் போலப் பெரியவன்' என்றது.

எல்லாப் பூக்களும் தாமரையை ராஜா என்று ஒப்புக் கொண்டு, கைகொட்டி வரவேற்றன.

## கேள்விகள்

1. பூக்கள் எதற்காக ஒன்றுகூடின?

2. தானே ராஜா ஆகவேண்டும் என்பதற்குச் சில பூக்கள் சொல்லிய காரணத்தை எழுது.

3. கடைசியாக எது பூக்களின் ராஜாவாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது?

## அப்பியாசம்

ஆந்திரம் ஒரு தேசம்.
ஏரியில் பூக்கள் இருக்கின்றன.
ராஜா மந்திரியை நோக்கினார்.
ஆந்திரம் .... தேசத்தின் பெயர்.
ஏரி .... இடத்தின் பெயர்.
பூக்கள் .... பொருளின் பெயர்.
ராஜா .... ,,
மந்திரி .... ,,
இந்தச் சொற்கள் பெயர்ச் சொற்கள்.



## 3. ஜீவகாருணியம்

| | | |
|---|---|---|
| உற்சாகம் | அதிகரித்தது | நியாயம் |
| பொறுக்கி | குறி | பொறுக்க முடியாத |
| வேடிக்கை | வதைக்கலாமா | ஏற்பட்டிருக்கும் |
| காயம் | துன்பம் | புத்தி |

1. ஒரு குளத்தில் தவளைகள் அதிகமாக இருந்தன. ஒரு நாள் காலையில் பல சிறுவர்கள் அதன் கரையில் நின்று கொண்டு, கல் எறிந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எறிந்த கல் பட்டுச் சில தவளைகள் இறந்து போயின.

2. இதைக் கண்ட சிறுவர்கள் உற்சாகமாகக் கற்களைப் பொறுக்கி, மேலும் மேலும் தவளைகள் மீது வீசினார்கள். கல், குறி தவறாமல் தவளை மீது விழுவது அவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது. இதனால் இன்னும் சில தவளைகள் இறந்து போயின; பல தவளைகள் காயம் அடைந்தன.

3. சிறுவர்களுக்கு உற்சாகம் அதிகரித்தது. அவர்கள் குறி வைத்துத் தவளைகள்மேல் கல் எறிந்து கொண்டே இருந்தார்கள். அப்பொழுது அந்தக் குளத்தின் கரை வழியாக ஒரு கிழவர் வந்தார். அவர் அவர்களை நோக்கி, 'பிள்ளைகளே, நீங்கள் தவளைகளை இப்படி வதைக்கலாமா?' என்று கேட்டார்.

4. அதற்கு அவர்கள், 'தவளைகளை வதைக்க வேண்டுமென்று நாங்கள் கல் எறியவில்லை. எங்கள் விளையாட்டிற்காக இப்படிச் செய்கிறோம்' என்றார்கள். அதைக் கேட்ட கிழவர், 'அப்படியா! உங்கள் மேலே ஒருவன் விளையாட்டாகக் கல் எறியலாமா? எறிந்தால் அது உங்களுக்கு எவ்வளவு துன்பம் கொடுக்கும்!' என்று சொன்னார்.

5. இப்படி அவர் சொன்னது சிறுவர்களுக்கு நியாயமாகத் தோன்றியது. 'ஒருவன் எங்கள் மேல் கல் எறிந்தால் அஃது எங்களுக்குப் பொறுக்கமுடியாத துன்பத்தைக் கொடுக்கும். அப்படித்தான் தவளைகளுக்கும் துன்பம் ஏற்பட்டிருக்கும். இனிமேல் நாங்கள் தவளைகளை வதைக்க மாட்டோம்' என்று அவர்கள் கிழவரிடம் சொன்னார்கள். 'விளையாட்டாகவும் ஒருவருக்குத் துன்பம் செய்யக்கூடாது' என்று கிழவர் அவர்களுக்குப் புத்தி சொன்னார்.

### கேள்விகள்

1. குளத்தின் கரையில் சிறுவர்கள் என்ன செய்தார்கள்?
2. கிழவர் அச்சிறுவர்களிடம் என்ன கேட்டார்?
3. அதற்குச் சிறுவர்கள் சொன்ன பதில் என்ன?
4. சிறுவர்களுக்குக் கிழவர் கூறிய புத்திமதி யாது?

### அப்பியாசம்

1. ஒருவன் — மேல் — எறிந்தால், நீங்கள் — செய்வீர்கள்?

கோடு இட்ட இடங்களில் தகுந்த சொல் இட்டு வாக்கியத்தைப் பூர்த்தி செய்.

2. ஜோடி சேர் :—

| | | | |
|---|---|---|---|
| குளத்தின் | விழுந்தது | கிழவர் | அதிகரித்தது |
| கல் | இறந்தன | சிறுவர்கள் | சொன்னார் |
| தவளைகள் | கரை | சந்தோஷம் | கூடிநின்றார்கள் |

## 4. கெடுவான் கேடு நினைப்பான்

| | | |
|---|---|---|
| அரசன் | லஞ்சம் | தற்கொலை |
| கொலையாளி | காட்டு வழி | ராஜ குமாரன் |
| மன மகிழ்ந்து | தோழன் | இன்னும் |

1. ஒரு காலத்தில் ஓர் அரசன் சிறு வயதுள்ள தன் மகனை மந்திரியிடம் ஒப்புவித்து, மரணம் அடைந்தான். மந்திரி ராஜ குமாரனைக் கொன்றுவிட்டால், தன் மகனை அரசனுக்கிவிடலாம் என்று நினைத்தான்.

2. இதற்காக அவன் ஒரு கொலையாளியிடம் பணம் கொடுத்து, 'நீ ஒரு காட்டு வழியில் மறைவாக இருந்து, என்னிடமிருந்து கடிதம் கொண்டு செல்லும் ராஜ குமாரனைக் கொன்று விடவேண்டும்' என்று சொல்லி ஏற்பாடு செய்திருந்தான். பிறகு குறித்த தினத்தில், ராஜ குமாரனை அழைத்து, 'நீ இக்கடிதத்தை எடுத்துக் கொண்டுபோய் விலாசக்காரரிடம் நேரில் கொடுக்க வேண்டும். முக்கியமான விஷயங்கள் இதில் எழுதப் பட்டிருக்கின்றன. நான் வேலைக்காரரையாவது உத்தியோகஸ்தரையாவது இவ் விஷயத்தில் நம்பமுடியாது' என்று சொன்னான்.

3. மந்திரி குமாரன் ராஜ குமாரனுக்கு நெருங்கிய தோழனாக இருந்தான். அக்கடிதத்தைத் தானே கொண்டு போய்க் கொடுப்பதாக ராஜ குமாரனிடம் சொன்னான். பிறகு மந்திரிகுமாரன் கடிதத்தை எடுத்துக்கொண்டு போனான். மந்திரியிடம் லஞ்சம் பெற்றுக்கொண்ட கொலையாளி காட்டு வழியில் காத்திருந்தான். அவன் அதற்கு முன் மந்திரி குமாரனையாவது ராஜ குமாரனையாவது நேரில் பார்த்ததில்லை.

4. அவன் மந்திரி குமாரனைப் பார்த்து, 'நீ மந்திரியிடமிருந்து கடிதம் கொண்டு போகிறாயா?' என்று

அதட்டிக் கேட்டான். அவன் நடுங்கிக் கொண்டே, 'ஆம்' என்று பதில் சொன்னான். இதைக் கேட்டதும், கொலையாளி, மந்திரி மகனைக் கத்தியால் குத்திக் கொன்று விட்டான். பிறகு அவன் மந்திரியிடம் சென்று, 'காரியம் முடிந்து விட்டது' என்று தெரிவித்தான்.

5. மந்திரி மன மகிழ்ந்து, அவனுக்கு இன்னும் அதிகமாகப் பணம் கொடுத்தான். பிறகு தன் மகனே கொல்லப்பட்டான் என்ற செய்தி மந்திரிக்கு எட்டியது. உடனே அவன் துக்கத்தில் ஆழ்ந்து, தற்கொலை செய்து கொண்டான்.

6. மந்திரி ராஜ குமாரனுக்குக் கேடு நினைத்தான். முடிவில் அவன் குடும்பமே நாசமாகி விட்டது. பிறருக்குத் தீங்கு செய்ய நினைத்தால், அது தனக்கே வந்துசேரும். பிள்ளைகளே, 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது உண்மை அல்லவா ?

## கேள்விகள்

1. மந்திரி எண்ணிய கெட்ட எண்ணம் என்ன ?
2. தன் எண்ணத்தை நிறைவேற்ற அவன் யாது செய்தான் ?
3. அந்தக் காரியம் எப்படி முடிந்தது ?
4. இதனால் நீ என்ன அறிகிறாய் ?

## அப்பியாசம்

1. மந்திரி — அரசகுமாரனிடம் கொடுத்து — வழியாக அனுப்பினான். கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தைகளை எழுது.

2. இந்தப் பாடத்தில் வந்திருக்கும் பொருட் பெயர், இடப் பெயர், காலப் பெயர் ஒவ்வொன்று எழுது.



## 5. இருதலை மணியன்

| | | |
|---|---|---|
| எளிதில் | வழக்கப்படி | முக்கியம் |
| விவாதம் | உண்மை | குழி |
| நகர | சுற்றிக்கொண்டது | இருந்தது |
| உடம்பு | முழுவதும் | வெட்கம் |
| முன் பக்கம் | பின் பக்கம் | நெருப்பு |

1. பாம்புகளில் பல வகைகள் உண்டு. அவைகளுள் இருதலை மணியன் என்பது ஒரு வகைப் பாம்பு. அந்தப் பாம்பின் முன் பக்கமும், பின் பக்கமும் ஒன்று போல இருக்கும். அதனால் இது முன்பக்கம், இது பின் பக்கம் என்று எளிதில் அறிய முடியாது. இரண்டும் தலை என்றே சொல்லப்படும். ஆனாலும் கண்கள் முன் பக்கத்தில் மாத்திரம் உண்டு. இந்தப் பாம்பை மண்ணுண்ணிப் பாம்பு என்று சொல்வது வழக்கம்.

2. ஒரு நாள் இந்தப் பாம்பின் இரண்டு தலைகளுக்கும் விவாதம் உண்டாயிற்று. உண்மையான தலை, 'நான் தான் முன் செல்வேன்' என்றது. பின்புறம் உள்ள தலை, 'நான்தான் முன் செல்வேன்' என்றது. ஆனாலும் பாம்பு வழக்கப்படி உண்மையான தலையை முன் வைத்துப் போய்க்கொண்டிருந்தது. இதனால் உண்மைத் தலை, 'நான் தான் முக்கியம்' என்று சொல்லிற்று.

3. இது பின்புறம் உள்ள தலைக்கு வெட்கமாய் இருந்தது. ஒரு சமயம் அந்த இருதலை மணியன் ஒரு

மரத்து வேரைக் கடந்து போய்க்கொண்டிருந்தது. அப்பொழுது பின்புறம் உள்ள தலை அந்த வேரை நன்முய்ச் சுற்றிக் கொண்டது. பாம்பினுல் நகர முடியவில்லை. அதன் மேல் அந்தப் பாம்பு, 'முன்புறம் உள்ள உண்மைத் தலையைவிடப் பின்புறம் உள்ள தலையே முக்கியம்' என்று எண்ணிற்று.

4. இருதலை மணியன் அன்று முதல் பின்புறத்துத் தலையை முன்னுகச் செலுத்திப் போய்க்கொண்டிருந்தது. உண்மையான தலை தனக்கு ஏற்பட்ட கேவலத்தை எண்ணி எண்ணி மனம் வருந்தியது. என்ன செய்வது! பாம்பின் எண்ணப்படி அல்லவா தான் நடக்கவேண்டும்?

5. ஒரு நாள் பாம்பு தன் புது வழக்கப்படி பின் புறம் உள்ள தலையை முன் வைத்துப் போய்க்கொண்டிருந்தது. காட்டில் ஒரு குழியில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. பின் புறம் உள்ள தலைக்குக் கண் இல்லை அல்லவா? நெருப்பு எரிவதை அறியாமல் பாம்பு அந்தக் குழியில் விழுந்துவிட்டது. நெருப்பு உடம்பு முழுவதும் பற்றப் பாம்பு இறந்தது.

தகுதி அறிந்து எதையும் ஆலோசித்துச் செய்ய வேண்டும்.

## கேள்விகள்

1. இருதலை மணியன் என்பது என்ன?
2. எதனுல் அதற்கு அப்பெயர் வந்தது?
3. இருதலை மணியன் தலைகளுக்குள் வந்த விவாதம் என்ன?

## அப்பியாசம்

ஜோடி சேர் :—

| | |
|---|---|
| மரத்தின் | தலை |
| பாம்பின் | குழி |
| நெருப்பு | வேர் |
| நான் | சொல்லிற்று |
| தலை | செல்வேன் |



## 6. நிலாப் பாட்டு

| | | |
|---|---|---|
| வெண்ணிலா | வாரி | வீறு |
| புள்ளி மான் | ஜோதி | ஆரவாரம் |
| துள்ளுதல் | வீரம் | சிந்து |
| தெம்மாங்கு | குந்துதல் | சந்து |

அண்ணா ஓடிவா!
வெண்ணி லாவிலே,
புள்ளி மானைப்போல்
துள்ளி ஆடலாம். 1

பாலை வாரியே
லோகம் எங்குமே
வீசினால் என
ஜோதி வீசுதே! 2

வீரம் பொங்குது !
வீறு கொள்ளுது
ஆர வாரமாய்ப்
பாடி ஆடுவோம். 3

இந்த வேளையில்
எந்தப் பிராணி தான்
சந்து தேடிப் போய்க்
குந்தித் தூங்குமே ! 4

சிந்து பாடுவோம் !
தெம்மாங்கு பாடுவோம் !
தந்தனத் தானா
தான தனனா ! 5

### கேள்விகள்

நிலாவிலே சிறு பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் ?

### அப்பியாசம்

கீழ்கண்ட பதங்களை உபயோகித்து வாக்கியம் எழுது.

ஜோதி வீசுதல், புள்ளிமான், சிந்து பாடு.



## 7. அறிவுள்ள நாய்

| | | |
|---|---|---|
| உத்தியோகஸ்தன் | முக்கியமான | தொந்தரவு |
| மகிழ்ச்சி | ஈடுபட்டிரு | துப்பாக்கி |
| இளைப்பாறி | நோக்கம் | தற்செயலாக |
| கூடாரம் | அவசரம் | சிகிற்சை |

1. ஒரு காலத்தில் ஓர் உத்தியோகஸ்தன் ஒரு நாயை வளர்த்து வந்தான். அவனுக்கு அந்த நாயினிடத்தில் அதிக அன்பு உண்டு. அவன் அதை நன்றாகப் பழக்கி இருந்தான். அது அவன் விரும்புகிறபடி நடந்து அவனுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கியது. அவன் வேலை செய்துகொண்டு இருக்கும்பொழுது அது சிறிது தூரத்திலிருந்து விளையாடிக் கொண்டிருக்கும். வேலையை முடித்து அவன் இளைப்பாறிக் கொண்டிருக்கும்போது அது வாலை ஆட்டிக்கொண்டு வந்து அவனோடு விளையாடும்.

2. உத்தியோகஸ்தன் ஒரு சமயம் அயலூருக்குச் சென்றான். அங்கே காட்டுப் பக்கத்தில் ஒரு கூடாரம் அமைத்துக்கொண்டு தங்கினான். நாயும் அவனோடு போயிருந்தது. அவன் தனக்கு நல்ல பால் வேண்டும் என்று பசுவையும் கொண்டுபோயிருந்தான். அஃது ஓர் ஆலமரத்தின் கீழே மேய்ந்துகொண்டிருந்தது.

3. பசு மேய்ந்துகொண்டிருக்கும்போது, ஒரு பாம்பு பளிச்சென்று படமெடுத்துச் சீறிக்கொண்டு அதைக் கடிக்க வந்தது. அதைப் பார்த்த நாய் கூடாரத்திற்குச் சமீபத்தில் இருந்த உத்தியோகஸ்தன் முன் ஓடிச் சென்று பலமாகக் குரைத்தது. அச்சமயம் அவன் ஒரு முக்கியமான வேலையில் ஈடுபட்டிருந்தான். அதனால் நாய் குரைத்ததைக் கவனிக்கவில்லை. உடனே அஃது அவன் மேலே விழுந்து வேலை செய்யாதபடி அவனைத் தடுத்தது. நாயின் நோக்கத்தை அவன் தெரிந்துகொள்ளவில்லை. அவசரமான வேலைக்கு மத்தியில் அது தொந்தரவு செய்ததற்காக அவன் பெருங்கோபம் கொண்டான்; உடனே தன் கைத் துப்பாக்கியால் நாயைச் சுட்டு விட்டான்.

4. பிறகு அவன் தற்செயலாகப் பசு மேய்ந்துகொண்டிருந்த இடத்தை நோக்கினான். அது கீழே விழுந்து துடித்துக்கொண்டிருந்தது. உத்தியோகஸ்தன் ஓடிப்போய்ப் பார்த்தான்; பாம்பு கடித்துவிட்டதென்று தெரிந்துகொண்டு தக்க சிகிற்சை செய்தான். பசு பிழைத்துக்கொண்டது. அப்பசுவின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவே நாய் தன்னைத் தொந்தரவுசெய்தது என்று அவன் அறிந்துகொண்டான்; ஆராயாமல் நாயைக் கொன்றதற்காக மிகவும் வருந்தினான்.

### கேள்விகள்

படத்தைப் பார்த்துக் கதை சம்பந்தமாக ஐந்து வாக்கியங்கள் சொல்லு.

### அப்பியாசம்

உத்தியோகஸ்தன், கூடாரம், நோக்கம், தொந்தரவு, தற்செயலாக — இந்த வார்த்தைகளை உபயோகித்து, ஒவ்வொரு வாக்கியம் எழுது.



## 8. குரங்குகளும் குல்லா வியாபாரியும்

| | | |
|---|---|---|
| மூட்டை | இளைப்பாறுதல் | கண்ணயர்தல் |
| ஊர் தோறும் | மிருதுவாக | சோதித்தல் |
| நிமித்தம் | மந்தாரம் | நாலு பக்கமும் |
| கடத்தல் | தலையணை | அடையாளம் |

1. ஒரு ஊரில் ஒரு குல்லா வியாபாரி இருந்தான். அவன் பல வகைப்பட்ட குல்லாக்களை ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு, ஊர் தோறும் சென்று விற்றுவருவது வழக்கம்.

2. ஒரு நாள் அவன் ஓர் ஊருக்கு வியாபார நிமித்தம் போய்க்கொண்டிருந்தான். போகும் பாதையில் அவன் ஒரு காட்டைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. வெயில் கடுமையாக இருந்தது. வியாபாரி வெப்பம் பொறுக்க மாட்டாமல் மிகவும் களைத்திருந்தான். அதனால் அவன் வழிப்பாதையில் இருந்த ஆலமரத்தின் நிழலில் சிறிது இளைப்பாற எண்ணி அதன் கீழே உட்கார்ந்தான்.

3. வியாபாரி ஆலமரத்தின் நிழலில் உட்கார்ந்ததும் காற்று மிருதுவாக வீசியது. வானம் மந்தாரமாக இருந்தது. அதனால் வியாபாரிக்கு, 'இந்த நிழலில் சிறிது படுத்து இளைப்பாறுவோமே' என்ற எண்ணம் உண்டாயிற்று.

ஆகவே, அவன் தனது குல்லா மூட்டையைப் பக்கத்தில் வைத்துவிட்டுக் கீழே படுத்துச் சிறிது கண்ணயர்ந்தான்.

4. வியாபாரி தூங்கினதுதான் தாமதம் அந்த ஆல மரத்திலே வசித்திருந்த குரங்குகள் எல்லாம் கீழே இறங்கி வந்து வியாபாரியின் மூட்டையைச் சோதிக்கத் தொடங் கின. மூட்டைக்குள் குல்லாக்கள் இருப்பதைக் கண்டதும் அவைகளை ஒவ்வொன்ருக எடுத்தன. வியாபாரி தலையில் குல்லா வைத்திருந்ததைப் பார்த்து, அக் குரங்குகளும் தங்கள் தலையில் ஒவ்வொரு குல்லாவை அணிந்துகொண்டு, மரத்தின் மேல் ஏறிவிட்டன.

5. சிறிது நேரம் கழித்ததும், வியாபாரி விழித்து எழுந்தான். பக்கத்தில் வைத்திருந்த மூட்டையில் குல்லா வொன்றையும் காணவில்லை. அவன் நாலு பக்கமும் சுற்றி அலைந்து பார்த்தான். குல்லாவின் அடையாளம் ஒன்றும் தெரியவில்லை. தற்செயலாக மரத்தின் மேல் பார்த்த பொழுது குரங்குகள் ஒவ்வொன்றும் குல்லாவைத் தலையில் அணிந்திருப்பதைப் பார்த்தான்.

6. அவன் குரங்குகளை நயந்து கேட்டான். ஒன்றும் பயனில்லை. பயப்படுத்திப் பார்த்தான்; பயனில்லை. ஆகவே அவன் மிகவும் மனவெறுப்புடன் தன் தலையிலிருந்த குல்லாவைக் கழற்றிப் பூமியில் எறிந்தான். உடனே குரங்கு களும் தாம் வைத்திருந்த குல்லாக்கள் ஒவ்வொன்றையும் மடமட வென்று வீசி எறிந்தன. வியாபாரி குல்லாக்களை யெல்லாம் சேர்த்து எடுத்து, மூட்டையாகக் கட்டிக்கொண்டு அந்த இடத்தைவிட்டுப் போய்விட்டான்.

### கேள்விகள்

1. குல்லா வியாபாரியின் தொழில் என்ன?
2. குல்லாக்கள் காணமற் போனதற்கு என்ன காரணம் ?
3. அவை எப்படித் திரும்ப வந்தன ?

### அப்பியாசம்

1. வியாபாரி — நிழலில் — காற்று — வீசியது.
2. பக்கத்தில் வைத்திருந்த — குல்லா காணவில்லை.

மேலே கோடிட்ட இடங்களில் வார்த்தைகளை எழுதிப் பூர்த்திசெய்.



## 9. நரியும் மத்தளமும்

| | | |
|---|---|---|
| பசி | சத்தம் | தாழ்ந்த |
| இரை | இரவு வேளை | காற்று |
| வெகு தூரம் | பயம் | அறிந்து |
| அலைந்து | பதுங்கி | கோபம் |
| திரிந்து | கடும்பசி | குதிகுதித்து |
| தோல் | கிழிந்து | |

1. காட்டில் ஒரு நரி ஒரு நாள் பசியால் வருந்தி இரை தேடப் புறப்பட்டது. பல இடங்களிலும் இரை அகப்படாததால், அது வெகு தூரம் அலைந்து திரிந்தது.

2. கடைசியாக அது ஒரு தோட்டத்தைக் கண்டு, 'இங்கே இரை கிடைக்கும்' என்று நினைத்தது.

3. அப்பொழுது தோட்டத்தில், 'டம டமா' என்ற ஒரு சத்தம் கேட்டது. இரவு வேளையாக இருந்ததால், நரி நடுங்கிப் போயிற்று. 'டம டமா, டம டமா!' என்ற சத்தம் அடிக்கடி கேட்டது. இதனால் நரிக்குப் பயம் அதிகம் ஆயிற்று.

4. அது ஓர் இடத்தில் இரவு முழுதும் பதுங்கிக் கொண்டு இருந்தது. பொழுது விடிந்தவுடன், நரி தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தது; அப்பொழுது அதற்குக் கடும் பசியாக இருந்தது.

5. ஒரு மரத்தின் தாழ்ந்த கிளையில், மத்தளம் ஒன்று தொங்கிக்கொண்டு இருந்தது. காற்று வீசும்போதெல்லாம், மரக்கிளை மத்தளத்தில் பட்டது. இதனால்தான் அடிக்கடி சத்தம் உண்டாயிற்று என்று நரி அறிந்துகொண்டது.

6. உடனே நரிக்குக் கோபம் உண்டாயிற்று. ஒரு குதி குதித்து, மத்தளத்தின் தோலைக் கடித்து இழுத்தது. இதனால் அத்தோல் கிழிந்து போயிற்று. பிறகு சத்தம் கேட்கவில்லை.

7. பிள்ளைகளே! நாம் வெறுஞ் சத்தத்தைக் கேட்டுப் பயப்படலாகாது.

### கேள்விகள்

1. நரி தோட்டத்தில் என்ன சத்தத்தைக் கேட்டு நடுங்கியது ?
2. நரி விஷயத்தைத் தெரிந்து கோபப்பட்டபோது அது என்ன செய்தது ?

### அப்பியாசம்

1. இங்கே இரை கிடைக்கும் .......... நினைத்தது.
2. அப்பொழுது தோட்டத்தில் .......... என்ற ஒரு சத்தம் கேட்டது.

கோடிட்ட இடங்களிலுள்ள வார்த்தையைப் பூர்த்தி செய்.

## 10. காகமும் பாம்பும்

| | | |
|---|---|---|
| புற்று | கரைந்து | கழற்றி |
| தடவை | தீர்மானித்து | கௌவி |
| ஆலோசனை | அரண்மனை | ஆயுதம் |
| சமயம் | மோதிரம் | யுத்தி |

1. ஓர் ஆலமரத்தில் காகம் ஒன்று கூடு கட்டி வாழ்ந்து வந்தது. அந்த மரத்தின் அடியில் ஒரு புற்று இருந்தது. அதில் ஒரு பெரிய பாம்பு நீண்ட காலமாக வசித்து வந்தது.

2. காகம் தன் கூட்டில் முட்டைகள் இட்டது. அம் முட்டைகளைக் கூட்டில் வைத்து விட்டு, அது பகல் வேளையில் இரை தேடப் போயிற்று. புற்றிலிருந்த பாம்பு இதை அறிந்து மரத்தின் மேல் ஏறி முட்டைகளை எல்லாம் தின்றுவிட்டது. காகம் திரும்பி வந்ததும், தன் முட்டைகளைக் காணுமல் துயரம் அடைந்தது.

3. இப்படி இரண்டு மூன்று தடவை, காகம் இட்ட முட்டைகள் எல்லாம் காணுமல் போயின. "இதற்குக் காரணம் என்ன ?" என்று காகம் ஆலோசனை செய்தது. அதற்கு ஒன்றும் விளங்கவில்லை. அடுத்த தடவை முட்டை இட்ட பின் அது வெளியே செல்லாமல் மரக்கிளை ஒன்றில் மறைந்து கொண்டிருந்தது.

4. அச்சமயம் புற்றிலிருந்த பாம்பு வழக்கம்போல மரத்தின் மேல் ஏறியது. காகம் பயப்பட்டு, 'கா, கா'

என்று கரைந்து கொண்டே கூட்டைச் சுற்றி



வட்டம் இட்டது. பாம்போ, சீறிக் கொண்டு முட்டைகளைத் தின்றுவிட்டது. பிறகு அது மெல்லக் கீழே இறங்கிப் புற்றில் புகுந்து கொண்டது.

5. காகம் நெடுநேரம் வருத்தப் பட்டுக் கொண்டிருந்தது. பிறகு அது பாம்பை எப்படியாவது கொன்றுவிட வேண்டுமென்று தீர்மானித்தது.

6. ஆலமரத்திற்குச் சிறிது தூரத்தில், அரசனுடைய அரண்மனை இருந்தது. காகம் அடிக்கடி போய் அங்கே கிடைக்கும் ஆகாரங்களைத் தின்று வரும். இந்த அரண்மனைக்குச் சமீபத்தில் அரசன் குளிப்பதற்கு ஓர் அழகிய சிறு குளம் உண்டு. ஒரு நாள் அவன் வழக்கப்படி தன் மோதிரத்தைக் கழற்றிக் கரையில் வைத்துவிட்டுக் குளித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது காகம் பறந்து ஓடி வந்து, மோதிரத்தைக் கௌவி எடுத்துக்கொண்டு,

மெதுவாகப் பறந்து சென்றது. அரசனுடைய சேவகர்கள் அதைத் தொடர்ந்து ஓடினார்கள். அவர்கள் பார்க்கும்படியாகக் காகம் அம்மோதிரத்தைப் பாம்பு இருந்த புற்றில் போட்டு விட்டது.

7. உடனே சேவகர்கள் தங்கள் கையில் இருந்த ஆயுதங்களால் புற்றை இடிக்கத் தொடங்கினார்கள். பாம்பு

சீறிக் கொண்டு வெளிப்பட்டது. சேவகர்கள் புற்றை

இடித்த ஆயுதத்திஞலேயே பாம்பையும் அடித்துக் கொன்ருர்கள். பிறகு, அவர்கள் மோதிரத்தை எடுத்துக்கொண்டு அரசனிடம் சென்ருர்கள்.

8. காகம் யுத்தியால் தன் சத்துருவைக் கொன்று சுகமாக அம்மரத்திலேயே நெடுங்காலம் வாழ்ந்தது. பிள்ளைகளே, 'புத்திமானே பலவான்' என்பது எவ்வளவு உண்மையானது, பாருங்கள்.

## கேள்விகள்

1. காகம் எங்கே கூடு கட்டி வசித்தது? அதற்கு உண்டான துன்பம் என்ன?

2. காகம் இட்ட முட்டைகள் காணமற் போனதற்குக் காரணம் யாது?

3. காகம் பாம்பைக் கொல்வதற்குச் செய்த உபாயம் என்ன?

4. அந்த உபாயம் எப்படி நிறைவேறிற்று?

## அப்பியாசம்

1. ஆலோசனை, அரண்மனை, ஆயுதம், யுத்தி, தீர்மானம் —இந்த வார்த்தை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்துச் சொல்லு.

2. காகம் மோதிரத்தைப் பாம்பு இருந்த புற்றில் போட்டு விட்டது. — இந்த வாக்கியத்தில் எத்தனை பெயர்ச் சொற்கள் இருக்கின்றன? அவை என்ன என்ன பெயர்?



## 11. அதிசயமான வீடு

| | | |
|---|---|---|
| வசதிகள் | பிரபு | அமைதல் |
| நேர்த்தி | சித்திரவேலை | நியமிக்கப்பட்டு |
| பங்களா | கவனித்து | கொற்றன் |
| சொந்தக்காரர் | அரண்மனை | மதிப்பிடலாம் |
| மாசு | சிற்பிகள் | இயலாத |
| மறு | விசேஷ அழகோடு | பாதுகாத்தல் |

1. ஒரு நாள் சென்னப்பட்டணத்தில் பெரிய வீதி வழியாகக் கிருஷ்ண பிள்ளையும் அவருடைய மகன் எட்டு வயதுள்ள முருகனும் போய்க் கொண்டிருந்தார்கள். அப்பொழுது முருகன் வீதியிலுள்ள கட்டடங்களைப் பார்த்துப் பல கேள்விகள் கேட்டான். தகப்பனார் பின் வருமாறு அவனுக்குச் சொல்லுகிறார்.

2. இஃது ஓர் அழகான வீடு ; இந்த வீடு பல வகையான வசதிகளோடு அமைந்திருக்கிறது. இக்கட்டடத்தின் சொந்தக்காரர், சுமார் ஐயாயிரம் ரூபாய் செலவுசெய்து

இந்த வீட்டைக் கட்டியிருக்கிருர். அவர் தம் வீட்டைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்கிருர்.



3. இது ஒரு பங்களா. இது சாதாரண வீடுகளைக் காட்டிலும் எவ்வளவோ வசதியானது. இதற்கு இரண்டு முன் வாசல்கள் உண்டு. இதன் சொந்தக்காரர் சுமார் பதினாயிரம் ரூபாய் செலவு செய்து இதைக் கட்டி முடித்திருக்கிருர். அவர் இதை மாசு மறு இல்லாமல் வைத்திருக்கிருர்.



4. இம் மாளிகையின் சொந்தக்காரர் ஒரு பிரபு. இக் கட்டடத்திற்காக அவர் அறுபதினாயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிருர். இது சிறந்த சித்திர வேலைகளுடன் உறுதியாக அமைந்திருக்கிறது. சொந்தக்காரர் இதை நன்ருகக் கவனித்து வருகிருர்.



5. இஃது ஓர் அரண்மனை; அரசன் வசிக்கும் மாளிகையை அரண்மனை என்று சொல்லுகிருேம். பல சிற்பிகள் இக் கட்டடத்தை விசேஷ அழகோடும் வசதிகளோடும் அமைத்திருக்கிருர்கள். இதைக் கட்டி முடிப்பதில், அரசன் லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்திருக்கிருன்; இக் கட்டடத்தைப் பாதுகாப்பதற்குப் பல வேலைக்காரர்கள் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள்.

6. பல வகையான இவ் வீடுகளைக் காட்டிலும் மிகவும் அதிசயமான வீடு ஒன்று இருக்கிறது. அதுதான்

நமது உடம்பு. உலகத்திலுள்ள எந்தக் கொற்றனாவது சிற்பியாவது இப்படிப்பட்ட வீட்டைக் கட்டுவது இயலுமா? இது சிறு கட்டடமாக இருந்தாலும், உறுதியாகவும், அழகாகவும், வசதியாகவும் அமைந்திருக்கிறது.

7. இவ்வீடு இரண்டு தூண்களின் மேல் நிற்கிறது. இதற்கு இரண்டு ஜன்னல்களும், ஒரு முன் வாசலும், பக்கத்து வாசல்கள் இரண்டும் உண்டு. பிள்ளைகளே, இந்த அதிசயமான வீட்டிற்கு என்ன விலை மதிப்பிடலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்! கோடி ரூபாய் செலவு செய்தாலும் இப்படிப்பட்ட வீட்டைக் கட்டி முடிப்பது எவருக்கும் இயலாத காரியம் அல்லவா? இந்த வீட்டை நாள்தோறும் சுத்தம் செய்வதும் கேடு வராமல் கவனமாகப் பாதுகாப்பதும் நமது முக்கியமான கடமை.

## கேள்விகள்

1. நீ பார்த்த சில வகையான வீடுகளைச் சொல்லு.
2. உன்னுடைய வீடு அந்த வகைகளில் எதைச் சேர்ந்தது?
3. இந்தப் பாடத்தில் பங்களாவைப்பற்றி நீ படித்ததில் இரண்டு வாக்கியங்கள் எழுதுக.
4. நீ படித்த அதிசயமான வீட்டைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் சொல்லுக.

## அப்பியாசம்

படுத்திருந்தான் — படுத்து + இருந்தான்
அழகான — அழகு + ஆன

1. இவைபோலப் பின் வருபவைகளைப் பிரித்து எழுது:—
அமைந்திருக்கிறது, உலகத்திலுள்ள, அதிசயமான, நாள்தோறும்.
2. இந்த வீட்டில் சொந்தக்காரர் வசிக்கிறார் — இந்த வாக்கியத்திலுள்ள பெயர்ச் சொற்களை எடுத்தெழுது.
3. வசிக்கும், சொல்லுகிறோம், அரசன், என்று, அரண்மனை மாளிகையை — இந்த வார்த்தைகளை ஒழுங்குப்படுத்தி வாக்கியமாக்கு.

## 12. சிநேகத்தின் உயர்வு

| | | | |
|---|---|---|---|
| அடிமை | வேதனை | ஜாக்கிரதை | தண்டனை |
| கொடுமை | மெல்லிய | காயம் | பட்டினி |
| எஜமானன் | நடுநடுங்கினான் | வேடர்கள் | பயங்கரம் |
| இம்சித்து | வீக்கம் | வெகுமதி | கர்ஜித்து |
| குகை | பரிதாபம் | உத்தரவு | சந்தோஷம் |
| கூர்மை | சக்தி | கைதி | ஆச்சரியம் |

1. ஒரு காலத்தில் ஒரு பிரபு இருந்தார். அவருடைய அடிமைகளில் ஒருவன் சாந்தன் என்பவன். அக்காலத்தில் அடிமைகளை மிகவும் கொடுமையாக நடத்தி வந்தார்கள். சாந்தனுடைய எஜமானன் அவனை அதிகமாக இம்சித்து வந்தார். சாந்தன் இம்சை பொறுக்க முடியாமல் ஒரு நாள் இரவில் ஒருவருக்கும் தெரியாமல் காட்டில் புகுந்து குகை ஒன்றில் ஒளிந்துகொண்டான்.

2. மறுநாள் அவன் குகையிலிருந்து வெளி வந்ததும், குகைக்கு அருகில் ஒரு சிங்கம் படுத்திருப்பதைக்

கண்டான். அதன் காலில் கூர்மையான முள் ஒன்று தைத்திருந்தது. அது அந்தக் காலை மேலே தூக்கிக்கொண்டு வேதனை பொறுக்க முடியாமல் மெல்லிய குரலில் கதறிக்கொண்டிருந்தது.

3. சாந்தன் முதல்முதல் சிங்கத்தைக் கண்டதும் மிகவும் அஞ்சி நடுநடுங்கினன். பிறகு சிங்கத்தின் காலிலுள்ள முள்ளையும் வீக்கத்தையும் கண்டு பரிதாபம் கொண்டான். உயிரை வெறுத்திருந்ததால், அவன் உடனே துணிந்து சிங்கத்தின் அருகே சென்றுன். அது எழுந்திருக்கவும் சக்தி இல்லாமல் கிடந்தது. சாந்தன் அதன் காலை ஒரு கையால் பிடித்துக்கொண்டு, முள்ளை ஜாக்கிரதையாகப் பிடுங்கினன். காயத்தைச் சுத்தம் செய்து தன் ஆடையில் ஒரு பாகத்தைக் கிழித்துக் காலில் கட்டினன்.

4. கஷ்டம் நீங்கிய உடன், சிங்கம் அவன் கையை நக்கித் தன் நன்றியைத் தெரிவித்தது. அது முதல், சாந்தனும் சிங்கமும் சிநேகமாய் அந்தக் குகையில் வசித்து வந்தார்கள்.

5. இப்படி இருக்கையில், ஒரு நாள் சில வேடர்கள் அந்தச் சிங்கத்தை உயிரோடு பிடித்து அந்த நாட்டு அரசனுக்கு வெகுமதியாகக் கொடுத்தார்கள். அரசன் சிங்கத்தை ஒரு கூட்டில் அடைத்துவைக்கும்படி உத்தரவு செய்தான். பிறகு சாந்தனும் கைதியானன். 'இவன் தப்பி ஓடின அடிமை. இவனுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும்' என்று அவனுடைய எஜமானன் அரசனை வேண்டிக்கொண்டான்.

6. 'சிங்கத்தைச் சில நாள் பட்டினியாக வைத்திருந்து இந்த அடிமையை அதற்கு இரை ஆக்கவேண்டும்' என்று அரசன் தீர்ப்புச் செய்தான். குறித்த தினத்தில் அரசனும் உத்தியோகஸ்தர்களும் கூடியிருந்தார்கள். பசியோடு கூட்டில் இருந்த சிங்கம் பயங்கரமாகக் கர்ஜித்தது. கூட்டின் கதவைத் திறந்ததும், அது சாந்தன் நின்று கொண்டிருந்த இடத்திற்குப் பாய்ந்து வந்தது.

7. என்ன ஆச்சரியம்! சிங்கம் தனக்கு உதவிசெய்த சாந்தனை நன்ருய்த் தெரிந்துகொண்டது. உடனே அது தன் அன்பையும் சந்தோஷத்தையும் வெளியிடுவதுபோல அவனுடைய கையை நக்கியது. அப்போது சாந்தன் அதைத் தடவிக்கொடுத்தான். பிறகு அவன் அரசனை நோக்கி, "இந்த மிருகராஜா என்னுடைய சிநேகிதன், இதைத் தவிர எனக்கு வேறு சிநேகிதர் இல்லை" என்று சொன்னுன்.

8. அரசன் முதலானவர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். பிறகு, அவர்கள் சாந்தனிடம் நடந்த விஷயத்தை விசாரித்து அறிந்துகொண்டார்கள். 'சிநேகத்தை மறவாத சிங்கமும், அதற்கு ஆபத்தில் உதவிய நேசனும் உடனே விடுதலை அடையவேண்டும்' என்று அரசன் உத்தரவு செய்தான்.

## கேள்விகள்

1. சாந்தன் காட்டுக்குப் போகக் காரணம் என்ன?
2. சாந்தனுக்கும் சிங்கத்திற்கும் சினேகம் ஏற்பட்டது எதனுல்?
3. சாந்தனுக்கு விடுதலை எப்படிக் கிடைத்தது?

## அப்பியாசம்

1. பின் வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக அமைக்க:

சிங்கம் கையை நன்றியை நக்கி சாந்தன் தெரிவித்தது. நாள் சில சிங்கத்தை ஒரு பிடித்து வேடர்கள் உயிரோடு அந்த வெகுமதியாக அரசனுக்கு நாட்டு அந்த கொடுத்தார்கள்.

2. மேலே கொடுத்த இரண்டு வாக்கியங்களிலிருந்து பொருட் பெயர், இடப் பெயர்களை எடுத்து எழுது.

## 13. உண்மை

| | | |
|---|---|---|
| பிரியமாக | திறமை | பதுமை |
| விசேஷமாக | வெளிப்படுத்தி | துஷ்டத்தனம் |
| மதித்து | சக்தி | அஜாக்கிரதை |
| தண்டிப்பார்கள் | காரணம் | விம்மி விம்மி |
| யோசித்தான் | பொருத்தம் | அகம் |
| பிராணி | போற்றி | ஈடு |
| பழி | ஏமாற்றுவது | கருத்து |
| சுமத்துவது | சிந்தனை | பலமுறை |
| நியாயம் | கலக்கம் | அமிர்தம் |

1. சென்னையில் சாமுவேல் என்ற ஒரு பையன் இருந்தான். அவன் பெற்றோர்கள் ஒரு பூனையைப் பிரியமாக வளர்த்து வந்தார்கள். சாமுவேல் அடிக்கடி பூனையோடு விளையாடுவது வழக்கம். ஒருநாள் சாமுவேல் பூனையோடு விளையாடிக் கொண்டிருக்கும்போது, அவன் கைபட்டு ஓர் அழகிய பதுமை கீழே உருண்டு விழுந்து உடைந்து போயிற்று.

2. அப்பொம்மை மிக அழகாகவும், விலை உயர்ந்ததாகவும் இருந்ததால், சாமுவேலின் தாய் தந்தையர் அதை விசேஷமாக மதித்து வந்தார்கள். எனவே, நடந்ததை அவர்கள் அறிந்துகொண்டால், தன்னைத் தண்டிப்பார்கள் என்று சாமுவேல் அஞ்சினான்.

3. முதலில் அவன், அப் பொம்மையைப் பூனை உடைத்து விட்டது என்று சொல்லித் தான் தப்பிக் கொள்ளலாமா என்று யோசித்தான். பிறகு அந்த வாயில்லாப் பிராணி மீது பழியைச் சுமத்துவது நியாயமாகாது என்று நினைத்தான். 'பூனைக்குப் பேசும் திறமை இருந்தால், அது உண்மையை வெளிப்படுத்தி என்னைப் பொய்யனென்று காட்டிவிடுமே! அப்படிப்பட்ட சக்தி அதற்கு இல்லை என்ற காரணத்தைக் கொண்டு, நான் பொய்சொல்லுவது பொருத்தமுடையதாகுமா? என்னைப் பொன்போல்

போற்றி வளர்க்கும் பெற்றோரை ஏமாற்றுவதுதான் எவ்வாறு பொருந்தும் ?' என்று சாமுவேல் பலவிதமாகச் சிந்தனை செய்து, ஒருவித முடிவிற்கும் வராமல் கலக்கம் அடைந்திருந்தான்.

4. இந்நிலையில் சாமுவேலின் தந்தையும் தாயும் வெளியிலிருந்து வீட்டிற்குள் வந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் சாமுவேல் அழுது புலம்பினான். "நான் பூனையோடு விளையாடிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது இந்தப் பதுமை உடைந்து போயிற்று" என்று அவன் கதறி அழுதுகொண்டே, தன் தாயை நோக்கிச் சொன்னான். அவள், 'ஐயோ! இப் பதுமை விலை உயர்ந்த பொருள் ஆயிற்றே! இது எவ்வளவு அழகாக இருந்தது ! இதை இந்தப் பூனை உடைத்து விட்டதா ? இந்தத் துஷ்டப் பூனையை நாம் இன்று தண்டிக்க வேண்டும்' என்றாள்.

5. உடனே சாமுவேல், "அம்மா, நான் அப்படியே சொல்லித் தப்பிக்கொள்ளலாம் என்று முதல்முதல் நினைத்தேன். ஆனால் அது உண்மையன்று. நான் அஜாக்கிரதையால் இந்த அருமையான பொம்மையை உடைத்து விட்டேன். அப்படியிருக்கப் பேசத்தெரியாத அந்த ஏழைப் பிராணியின் மேல் நான் ஏன் வீண்பழி சுமத்த வேண்டும்? இந்த விலை உயர்ந்த பொம்மை உடைந்ததற்கு என்னுடைய விளையாட்டுப் புத்திதான் காரணம் " என்று சொல்லிக்கொண்டே விம்மி விம்மி அழுதான்.

6. சாமுவேலின் பெற்றோர்கள் தங்கள் அருமை மகன் தைரியமாக உண்மை பேசியதைக் குறித்து அக மகிழ்ந்தார்கள். " அப்பா மகனே ! இப்படிப்பட்ட பதுமைகள் நூற்றுக்கணக்காக உடைந்தாலும் குற்றமில்லை. இந்தப் பதுமை எவ்வளவு விலை உயர்ந்ததாயினும் நீ சொன்ன உண்மைக்கு ஈடாகுமா ? விலை உயர்ந்த பொருள்களில் எல்லாம் அதிக விலை உயர்ந்தது உண்மையே யாகும் " என்று தகப்பனார் சாமுவேலை நோக்கிக் கூறி அவனை உற்சாகப் படுத்தினார். தாயோ தன் கருத்தை

வெளியிடாமல், மகனது கண்ணீரைத் துடைத்து, அவனைப் பலமுறையும் முத்தமிட்டுக்கொண்டாள்.

அன்னையின் முத்தம் அமிர்தத்தினும் சிறந்ததல்லவா ?

## கேள்விகள்

1. பதுமை உடைந்து போனதற்குக் காரணம் யாது ?

2. சாமுவேல் தன் குற்றத்தை மறைத்து விடலாமென்று ஏன் முதலில் எண்ணினன்?

3. முடிவில் அவன் செய்ததென்ன ?

4. அதனால் அவன் அடைந்த நன்மை யாது ?

## அப்பியாசம்

1. பூனை, பதுமை, பிராணி, தாய், தந்தை, சாமுவேல் — இந்த ஆறு பெயர்களில் தாய், தந்தை, சாமுவேல் இவை மனிதர்களைக் குறிக்கும் பெயர்கள்: ஆகையால் அவைகள் உயர்திணைப் பெயர்கள். மற்ற மூன்றும் அஃறிணைப் பெயர்கள்.

2. நீ வேறு ஐந்து உயர்திணைப் பெயர்களும் ஐந்து அஃறிணைப் பெயர்களும் எழுது.

3. இரண்டு பத்திகளிலுள்ளவற்றில் பொருத்தமானவைகளை ஜோடி சேர்.

| | |
|---|---|
| சாமுவேலின் பெற்றோர்கள் | நாம் இன்று தண்டிக்கவேண்டும். |
| சாமுவேலின் கைபட்டு | அவனை உற்சாகப்படுத்தினர். |
| இந்தத் துஷ்டப் பூனையை | பதுமை கீழே விழுந்தது. |
| விலை உயர்ந்த பொருள்களில் எல்லாம் | ஒரு பூனையை வளர்த்தார்கள். |
| சாமுவேலின் தகப்பனர் | அதிக விலை உயர்ந்தது உண்மையே. |

4. கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தைகளை எழுது.
பதுமை — விழுந்து உடைந்தது. (கீழே, மேலே)

சாமுவேல்—உண்மை சொன்னன். (பிரியமாக, தைரியமாக, அன்பாக)

சாமுவேல் விம்மி விம்மி — (ஓடினன், சிரித்தான், அழுதான்)



## 14. பேராசைச் சிறுவன்

| | | |
|---|---|---|
| நீர்வளம் | கனமாய் | வழக்காடு |
| நிலவளம் | மேய்க்கிற | வழிப்போக்கன் |
| வெல்லம் | நிரம்ப | சமாசாரம் |
| பொதி | சம்மதித்து | விசாரித்தான் |
| வெருண்டு | வர்த்தகன் | சங்கதி |
| துள்ளிற்று | பல்லவி | உபாயம் |
| முயற்சி | உருண்டை | பயிரிடுதல் |

1. லக்ஷ்மீபுரம் என்பது நீர்வளமும் நிலவளமும் உள்ள சிறிய கிராமம். ஊரைச் சுற்றியுள்ள நான்கு பக்கங்களிலும் வயல்கள் உண்டு. அந்த வயல்களில் நெல்லும் கரும்பும் மிகுதியாகப் பயிரிடுவது வழக்கம். கரும்பிலிருந்து வெல்லம் உண்டாக்கி அவ்வூரார் விற்பார்கள்.

2. ஒருநாள் முத்துச்செட்டியார் என்ற வியாபாரி ஒருவன் வெல்லத்தை விற்கப் புறப்பட்டான். அவன் வெல்லப் பொதிகளைப் பத்து எருதுகளின் மேல் ஏற்றிக் கொண்டு வந்தான். இடைவழியில் ஒருவன் குடை பிடித்துக்கொண்டு எதிரே வந்தான். அவனைக் கண்டதும் அந்த எருதுகளில் ஒன்று வெருண்டு துள்ளிற்று. அதனால் அதன் மேல் இருந்த வெல்லப் பொதி கீழே விழுந்துவிட்டது. வியாபாரி அந்தப் பொதியை எருதின் மேல் ஏற்ற முயற்சி செய்தான். பொதி கனமாய் இருந்த படியால் அவனால் முடியவில்லை.

3. அந்தச் சமயத்தில் மாடு மேய்க்கிற சிறுவன் ஒருவன் அவ்வழியே சென்றான். வியாபாரி அவனை அழைத்துத், "தம்பி, இந்த வெல்லப் பொதியை என்னோடு ஒருகை பிடித்து மாட்டின் மேல் ஏற்று. நான் உனக்கு நிரம்ப வெல்லம் தருகிறேன்" என்று வேண்டிக் கொண்டான். சிறுவனும், "நல்லது" என்று சம்மதித்துப் பொதியைத் தூக்கி மாட்டின் மேல் ஏற்றினான். வியாபாரி அச்சிறுவனுக்குத் தான் சொன்னபடி ஓர் உருண்டை வெல்லம் எடுத்துக் கொடுத்தான். சிறுவனோ, "இது கொஞ்சம், நிரம்ப வெல்லம் கொடு" என்றான். வர்த்தகன் பின்னும் கொஞ்சம் வெல்லம் கொடுத்தான். சிறுவன், "இதுவும் கொஞ்சந்தான். இன்னும் நிரம்பக் கொடு" என்றான். வியாபாரி கொடுக்கக் கொடுக்கச் சிறுவன், "இது கொஞ்சம், நிரம்பக் கொடு" என்று தன் பல்லவியைப் பாடிக்கொண்டே இருந்தான்.

4. இவ்வாறு சிறுவன் வியாபாரியிடம் வழக்காடும் பொழுது அவ்வழியே சென்ற ஒரு வழிப்போக்கன், வியாபாரியிடம் வந்து சமாசாரத்தை விசாரித்தான். வியாபாரி நடந்த சங்கதி முழுவதும் சொன்னான். உடனே வழிப்போக்கன் ஓர் உபாயம் பண்ணினான். அவன் ஒரு கையில் கொஞ்சம் வெல்லமும், மற்றொரு கையில் அதைக் காட்டிலும் சற்று அதிகமான வெல்லமும் எடுத்துக்

கொண்டு, சிறுவனிடம் இரண்டையும் காட்டி, "இது எவ்வளவு? இது எவ்வளவு?" என்று கேட்டான். சிறுவன், "அது கொஞ்சம், இது அதிகம்" என்ருன். வழிப் போக்கன், "நன்று, இது அதிகமாய் இருக்கிறதால், நீ இதை வாங்கிக்கொண்டு போ" என்று சொன்ஞன். சிறுவன் வெட்கம் கொண்டு அதை வாங்கிக் கொண்டு போஞன்.

### கேள்விகள்

1. லக்ஷ்மீபுரத்தின் செழிப்பு எப்படிப்பட்டது?

2. முத்துச்செட்டியார் வெல்லம் விற்கப்போகும் போது அவருக்கு ஏற்பட்ட கஷ்டம் என்ன?

3. அந்தக் கஷ்டம் எப்படி நிவர்த்தியாயிற்று?

4. சிறுவனுக்கும் செட்டியாருக்கும் ஏற்பட்ட வழக்கு யாது?

5. அந்த வழிப்போக்கன் அதை எப்படித் தீர்த்தான்?

### அப்பியாசம்

1. வியாபாரி தான் சொன்னபடி சிறுவனுக்கு ஒரு உருண்டை வெல்லம் எடுத்துக் கொடுத்தான்.—இதிலுள்ள பெயர்ச் சொற்களை எடுத்தெழுதி அவை இன்ன திணை என்று எழுதுக.

2. உயர்திணைப்பெயர் ஐந்தும் அஃறிணைப்பெயர் ஐந்தும் எழுதுக.

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை இட்டு எழுதுக:—

சிறுவன் — வெல்லம் — கொடு — தொந்தரவு —. வழிப் போக்கன் — கையில் — —, மற்ருெரு — — — எடுத்துக்கொண்டு, சிறுவனிடம் எது வேண்டும் — கேட்டான்.

4. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்கு:—

இது, வழிப்போக்கன், நீ, அதிகமாய், நன்று, இதை, போ, இருக்கிறதால், வாங்கிக்கொண்டு, சொன்ஞன், என்று.

வழக்கம், மிகுதியாக, நெல்லும், வயல்களில், கரும்பும், அந்த, பயிரிடுவது.



## 15. தாலாட்டு

| | | |
|---|---|---|
| அமுதம் | புன்சிரிப்பு | சீமான் |
| தெவிட்டாக் கனி | திருமுகம் | திருக்குமாரன் |
| பைங்கிளி | இளவரசு | பணிகாரம் |
| சப்பாணி | கைப்பாவை | கண் ணுறங்கு |

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ

1. தெள்ளமுத முண்டு
தெவிட்டாக் கனியுண்டெம்
உள்ளங் குளிர
உரையாடும் பைங்கிளியோ.

2. நெஞ்சிற் கவலையெலாம்
நீங்கத் திருமுகத்திற்
புன்சிரிப்பைக் காட்டியெம்மைப்
போற்றும் இளவரசோ.

3. ஆரடித்தார் உன்னை
அடித்தாரைச் சொல்லியழு
சீரடுத்த செல்வமிகு
சீமான் திருக்குமரா.

4. பாலில் விருப்போ
பணிகாரம் வேண்டினையோ
சோலைப் பசுங்கிளியே
சுந்தரமே சொல்லியழு.

5. சப்பாணி கொட்டித்
தளர்ந்தனையோ அல்லதுன்றன்
கைப்பாவைக் காகக்
கலங்கி அழுதனையோ.

6. தித்திக்குந் தேனுந்
தினைமாவுங் கொண்டுன்றன்
அத்தை வருவாள்
அழவேண்டாம் கண்மணியே.

7. மாங்கனியும் நல்ல
வருக்கைப் பலாக்கனியும்
வாங்கியுன் அம்மான்
வருவார் அழவேண்டாம்.

கண்ணுறங்கு கண்ணுறங்கு
கண்மணியே கண்ணுறங்கு

— S. தேசிகவிநாயகம் பிள்ளை.

### கேள்விகள்

1. குழந்தைகளின் முகமலர்ச்சியைக் கண்டால் கவலை யாருக்கு நீங்கும்?

2. குழந்தைக்கு மாம்பழம் பலாப்பழம் முதலியவை யார் வாங்கி வருவார்கள்?

### அப்பியாசம்

கீழ்க்கண்ட வார்த்தைகளை உபயோகித்து வாக்கியங்கள் எழுது.

பைங்கிளி, பணிகாரம், கைப்பாவை, சப்பாணி.

## 16. மூக்கறையன் கதை

| | | |
|---|---|---|
| அவயவம் | காட்சி | வடிவம் |
| கேலி | அளித்த | அரிந்து |
| சூழ்ச்சி | கருணை | மானம் |
| நமஸ்கரித்தல் | இடையூறு | அனைவரும் |
| இரக்கம் கொள்ளுதல் | முதல்வன் | அழுந்துதல் |

1. ஒரு காலத்தில் ஒரு ஊரில் மூக்கறையன் ஒருவன் இருந்தான். அவனுக்கு மூக்கு என்னும் அவயவம் குறைந்திருந்ததால் அவன் பேசும்போது 'நஞ்ஞா மிஞ்ஞா' என்று பேசுவான். ஊரில் உள்ளவர்களில் சிலர் இவனைக்கண்டவுடன் 'அஞ்ஞா எஞ்ஞே போஹிஞீர்ஞள்' என்று கேலியாகக் கேட்பது வழக்கம்.

2. இவ்வாறு தன்னை ஊரிலுள்ளவர்கள் கேலி செய்வதை அறிந்த மூக்கறையன் மிகவும் வருத்தப் பட்டான். இவன் வருத்தத்தை ஊரார் சிறிதும் பொருட் படுத்தவில்லை. ஆகவே இவன் ஒரு சூழ்ச்சி செய்யத் தொடங்கினான்.

3. ஒரு நாள் இவன் தன் வேலையைச் செய்து கொண்டிருக்கும்போது திடீரென்று வேலையை நிறுத்தி விட்டு, வானத்தை நோக்கி நின்று நமஸ்கரித்து 'ஈசா! உன்னுடைய அருமையான காட்சி தேவர்களுக்கும் கூடக் கிடையாதே. ஏழையாகிய என்மீது இரக்கங்கொண்டு காட்சி யளித்த கருணையை என்ன சொல்லுவேன். கடவுளே!' என்று சொல்லிப் பாடிக் குதித்து ஆடினான்.

4. இதனைக் கண்ட சிலர் தாங்களும் வானத்தைப் பார்த்தார்கள். அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவர்கள், 'ஐயா, உமக்குத் தெரிகின்ற காட்சி எங்களுக்கு ஏன் தெரியவில்லை' என்று மூக்கறையனிடம் கேட்டார்கள். அதற்கு அவன், 'ஐயா, மூக்குத்தான் எல்லாக் காரியங் களுக்கும் இடையூறாக இருக்கிறது. மூக்கு இல்லாதவர் களுக்கே முதல்வனுடைய வடிவம் தோன்றும்' என்று சொன்னான்.

5. இதைக் கேட்டவர்கள் உடனே தங்கள் மூக்கை அரிந்துகொண்டார்கள். வானத்தை நோக்கினார்கள். எதிரே கடவுளைக் காணவில்லை. ஆனாலும் அவர்களை மானம் வருத்தியது. 'என்ன அழகு கடவுளுடைய வடிவம்!' என்று சப்தமிட்டார்கள். இதைக் கேட்ட ஊரார் அனைவரும் தங்கள் மூக்கை அறுத்துக்கொண்டு வானத்தை நோக்கினார்கள். கடவுள் காட்சி யில்லாமல் கவலையில் அழுந்தினார்கள்.

ஒருவனைக் கேலிசெய்ததன் பயனாக ஊராரெல்லாம் கேலிக்கு ஆளானார்கள்.

## கேள்விகள்

1. மூக்கறையன் என்ற பெயர் எப்படி வந்தது?
2. அவனை ஊரிலுள்ளவர்கள் என்ன செய்தனர்?
3. மூக்கறையன் ஊர் ஜனங்களை அவமானப்படுத்த என்ன செய்தான்?

## அப்பியாசம்

1. ஒரு காலத்தில் ஒரு ஊரில் மூக்கறையன் ஒருவன் இருந்தான்.

இதிலுள்ள பெயர்ச் சொற்களை எழுதி அவை இன்ன திணை என்று எழுது.

2. பின் வருபவைகளில் பொருத்தமானவைகளை ஒன்றுசேர்:—

| | |
|---|---|
| மூக்கறையன் ஒரு நாள் வேலை செய்யும் போது | கவலையில் அழுந்தினார்கள் |
| ஊரார் கடவுளைக் காணாததால் | 'ஈசா உன் கருணையை என் என்பேன்' என்றான். |
| மூக்கறையன் வருந்துவதை | 'எங்களுக்கு ஏன் தெரியவில்லை' என்று ஊரார் கேட்டார்கள். |
| ஐயா, உமக்குத் தெரிகிற காட்சி | இந்த ஏழைக்கு அளித்த கருணையை என் என்பேன். |
| தேவர்களுக்கும் கிடையாத உமது தரிசனம் | முதல்வன் வடிவம் தோன்றும் |
| மூக்கு இல்லாதவர்களுக்கே | ஊரார் ஒருவரும் பொருட் படுத்தவில்லை. |



## 17. தெனாலிராமனும் திருடர்களும்

| | | |
|---|---|---|
| விகடகவி | பட்டாடை | தொடங்கினார்கள் |
| திருடர்கள் | பத்திரப்படுத்தினான் | தெரியாமல் |
| பதுங்கி | ஆஸ்தி | விடாமல் |
| மனைவி | துடுமென | உரத்த |
| செய்தி | நிலைக்க | பிழைத்தது |
| ஆபரணங்கள் | ஏற்றங்கள் | தாலி |

1. பிள்ளைகளே, முன் பாடத்தில் நீங்கள் ராய ராஜாவைப் பற்றிப் படித்தீர்கள் அல்லவா? அந்த அரசனிடம் இராமன் என்ற விகடகவி ஒருவன் இருந்தான். அவன் தெனாலி என்னும் ஊரில் பிறந்தவன். அதனால் அவனைத் தெனாலி ராமன் என்று எல்லாரும் சொல்லுவார்கள்.

2. ஒரு நாள் இரவில் சில திருடர்கள் தெனாலி ராமன் வீட்டிலே திருடச் சமயம் பார்த்து, வெளியே

பதுங்கி இருந்தார்கள். தெனுலிராமன் இந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டான். உடனே அவன் தன் மனைவியிடம் செய்தியைச் சொல்லி, வீட்டிலுள்ள ஆபரணங்கள், பட்டாடைகள், பணங்கள் எல்லாவற்றையும் பத்திரப்படுத்தினுன் பின்பு தன் மனைவியை அழைத்து, "இப்பொழுது ஊரிலே திருடர் பயம் அதிகம். அதனுல் நம்முடைய ஆஸ்திகளை எல்லாம் பெட்டியில் வைத்துப் பூட்டிக் கிணற்றில் போட்டு விடுவோம். திருடர் பயம் நீங்கின பிற்பாடு அவைகளை எடுத்துக் கொள்வோம்" என்று திருடர்கள் கேட்கும்படி சொன்னுன். அப்பால் அவனும் அவன் மனைவியுமாக ஒரு பெட்டியில் கல்லையும் கட்டியையும் நிரப்பி, மெதுவாக எடுத்துச் சென்று, பின்புறத் தோட்டத்தில் உள்ள கிணற்றில் பெட்டியைத் துடுமெனப் போட்டுவிட்டுச் சென்ருர்கள்.

3. மறைவில் இருந்த திருடர்கள், "யாம் வந்த காரியம் 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது' போல் ஆயிற்று. வீட்டினுள் போய்த் திருடவேண்டிய கஷ்டம் இல்லை. கிணற்றில் இறங்கி எடுத்துக் கொண்டுபோய் விடலாம்" என்று சந்தோஷம் கொண்டார்கள். தெனுலிராமனும் அவன் மனைவியும் போனதும், திருடர்கள் கிணற்றில் இறங்கிப் பெட்டியை எடுக்க முயற்சி செய்தார்கள். கிணற்றில் நீர் நிலைக்கவில்லை. அதனுல் அவர்கள் கிணற்றில் இருந்த ஏற்றங்களைப் பிடித்து இறைக்கத் தொடங்கினுர்கள்.

4. இஃது அறிந்து தெனுலிராமன் திருடர்களுக்குத் தெரியாமல் தோட்டத்திற்கு வந்து, தோட்டத்தில் உள்ள வாழை, மா, பலா, தென்னை முதலிய மரங்களுக்கு அத்தண்ணீரைப் பாய்ச்சினுன். கிணற்றுத் தண்ணீர் வற்ருதபடியால், திருடர்கள் விடாமல் இறைத்துக் கொண்டே இருந்தார்கள். பொழுதும் விடியத் தொடங்கிற்று.

5. தெனாலிராமன் திருடர்களை நோக்கி, "தோட்டம் எல்லாம் தண்ணீர் பாய்ந்தாயிற்று; ஏற்றம் இறைத்தது போதும்" என்று உரத்த குரலிற் சொன்னான். திருடர்கள் விடியற்காலம் ஆய்விட்டதைத் தெரிந்து இந்த மட்டில் 'தலை பிழைத்தது தாலிப் பாக்கியம்' என்று எண்ணி ஓட்டம் பிடித்தார்கள். அது முதல் தெனாலிராமன் வீட்டிற்குத் திருடர்கள் வருவதே இல்லை.

### கேள்விகள்

1. தெனாலிராமனுக்கு எதனால் அப் பெயர் வந்தது ?

2. திருடர்களை ஏமாற்றுவதற்குத் தெனாலிராமன் செய்த தந்திரம் என்ன ?

### அப்பியாசம்

1. பழம் நழுவிப் பாலில் விழுந்தது. — இதைப்போல மூன்று பழமொழிகள் சொல்லு.

2. ஒரு நாள் இரவில் திருடர்கள் தெனாலிராமன் வீட்டில் திருடச் சமயம் பார்த்து, வெளியில் பதுங்கி யிருந்தார்கள். — இந்த வாக்கியத்தி லுள்ள பெயர்ச்சொற்களை எடுத்து எழுதி, அவை இன்ன பெயர் என்று எழுதுக.

3. பின் வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடத்தில் பொருத்த மான வார்த்தை யிட்டுப் பூர்த்தி செய்.

தலை —— தாலிப் பாக்கியம் (உருண்டது, ஓடினது, பிழைத்தது).

கிணற்றில் —— சாமான்களை எடுத்துக் கொண்டு போய் விடலாம் (குதித்து, பாய்ந்து, நீந்தி, இறங்கி).

ஆஸ்திகளைப் பெட்டியில் —— —— கிணற்றில் —— விடுவோம் (பத்திரப்படுத்தி, வைத்துப்பூட்டி, வீசி, எறிந்து, போட்டு).



## 18. தூக்கணங் குருவியும் குரங்கும்

| | | |
|---|---|---|
| ஏராளமாக | குளிர் | சோனுமாரி |
| அறிவு | கோபம் | மழை |
| புய்த்து | சப்தம் | தூக்கணங் குருவி |
| இரக்கப்பட்டு | புத்தி | கூடு |

1. ஒரு மலைப் பக்கத்துக் காட்டில் குரங்குகள் ஏராளமாக வசித்து வந்தன. குரங்குகளின் தன்மையை நீங்கள் அறிவீர்கள் அல்லவா? அவைகள் பசி வந்த நேரத்தில் மரங்களில் உள்ள பழங்களைப் பறித்துத் தின்னும். மற்ற நேரங்களில் மரக் கிளைகளில் தாவிக் குதித்து விளையாடும். இந்த விதமாக அக்காட்டில் உள்ள குரங்குகள் காலங் கழிப்பது வழக்கம்.

2. ஒரு சமயம் மழை சோனா மாரியாய்ப் பெய்தது. அதனால் பிராணிகள் எல்லாம் குளிரால் வருந்தின. மலையும் குளிர்ந்து விட்டது. ஒரு குரங்கு குளிர் தாங்க முடியாமல் ஒரு மரத்தின் அடியில் நடுங்கிக்கொண்டு நின்றது. அந்த மரத்தின் மேல் ஒரு தூக்கணங் குருவி கூடுகட்டி வசித்திருந்தது. அக்குருவி குரங்கைப் பார்த்து இரக்கப்பட்டு, "வானரமே, நீயோ எங்களைவிட மேலான பிராணி; பெரும்பாலும் மனிதர்களைப் போலவே இருக்கிறாய். மழைக்காலத்தில் சுகமாக வசிக்க நீ வீடு கட்டிக் கொள்ளலாகாதா?" என்றது.

3. இப்படித் தூக்கணங் குருவி கேட்டதும் குரங்குக்குக் கோபம் மூண்டுவிட்டது. உடனே அது தூக்கணங் குருவியைப் பார்த்து, "ஏடா, ஊசி மூஞ்சி மூடா, அற்பப் பிராணியாகிய நீயா எனக்குப் புத்தி கற்பிப்பது? இரு. உனக்கு நல்ல அறிவு வரும்படி செய்கிறேன்" என்று சொல்லிற்று. தூக்கணங்குருவி, "ஐயோ, நாம் ஏன் இவ்வாறு பேசினோம்? நல்லதைத் தானே நாம் சொன்னோம். குரங்கோ கோபம்கொண்டு விட்டதே; என்ன செய்வது" என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

4. சிறிது நேரத்தில் மழை நின்றுவிட்டது. குரங்குக்கு உண்டான குளிரும் நீங்கிற்று. குரங்கு மரத்தின் மேல் ஏறத் தொடங்கிற்று. தூக்கணங்குருவி, குரங்கு மரத்தின் மேல் வருவதைக் கண்டு பயந்து, சப்தம் இட்டுக் கொண்டு வெளியே பறந்தது. சில குஞ்சுகள் தாயுடன் வெளியே பறந்து போயின. குரங்கு கூட்டின் அருகு சென்று, "குருவியே, என்னால் கூடு கட்ட முடியாவிட்டாலும், உன் கூட்டைப் புய்க்க முடியும்" என்று சொல்லிக் கொண்டே, அக்கூட்டைத் தன் கைகளால் புய்த்து எறிந்தது.

5. அது மட்டோ, குரங்கு கூட்டைப் புய்த்து எறிந்த காலத்தில், பறக்க முடியாமல் கூட்டினுள் இருந்து

சப்தம் இட்ட சிறு குஞ்சுகளையும் குரங்கு பூமியில் வீசி அறைந்து கொன்றது. தூக்கணங் குருவி தன் கூட்டையும் இழந்து, குஞ்சுகளையும் பறிகொடுத்து வருந்திற்று.

## கேள்விகள்

1. குரங்குகளின் தன்மை என்ன?
2. தூக்கணங் குருவி குரங்கினிடம் என்ன சொல்லியது?
3. அதைக் கேட்ட குரங்கு என்ன செய்தது?
4. இந்தப் பாடத்தினால் நீங்கள் என்ன கற்றுக் கொள்ளுகிறீர்கள்?

## அப்பியாசம்

கீழ்க் கண்டவைகளில் எது சரி, எது தப்பு?

| | | சரி |
|---|---|---|
| 1. | சூரியன் கிழக்கில் உதிக்கும். | |
| 2. | சூரியன் தெற்கில் மறையும். | |
| 3. | பால் வெள்ளை நிறம். | |
| 4. | பொன் பச்சை நிறம். | |
| 5. | கரி சிவப்பு நிறம். | |
| 6. | நாய் 'ளொள், ளொள்' என்று குரைக்கும். | |
| 7. | நாம் கைகளால் வேலை செய்கிறோம். | |
| 8. | நாம் காதுகளால் பாடுகிறோம். | |
| 9. | ஞாயிற்றுக் கிழமைக்கு அடுத்த கிழமை செவ்வாய்க் கிழமை. | |
| 10. | ஒரு வருஷத்துக்குப் பன்னிரண்டு மாதங்கள். | |

## 19. குருவியும் பாயசமும்

| | | |
|---|---|---|
| குப்பைமேடு | பருக்கை | ருசி |
| பிச்சைக்காரன் | கடைக்காரன் | சர்க்கரை |
| ஆத்திரம் | சமைத்து | வாந்தி |
| பாயசம் | கவனம் | மூழ்கி |

1. ஒரு வீட்டின் கூரையில் ஒரு குருவி கூடு கட்டி வாழ்ந்து வந்தது. ஒரு நாள் அவ்வீட்டிலுள்ள அம்மையார்ப் பாட்டி, பாயசம் சமைத்துச் சாப்பிட்டாள். அவளுடைய எச்சில் இலையில் இருந்த சில பருக்கைகளைக் குருவி கொத்தித் தின்றது. அவற்றின் ருசியைக் கண்டதும், குருவிக்குப் பாயசத்தின்மேல் ஆசை உண்டாயிற்று.



2. குருவிக்குக் குப்பை மேட்டில் ஒரு அரிசி கிடைத்தது. அந்த அரிசியை அது அம்மையாரிடம் கொடுத்து,வைத்திருக்கும்படி வேண்டிக்கொண்டது. அவளுடைய கவனக் குறைவால் அரிசியை எறும்பு கொண்டு போய்விட்டது. இதை அறிந்த குருவி, 'ஒரு அரிசிக்குப் பிடி அரிசி தா' என்று அம்மையாரைக் கேட்டது.

3. அவள் உடனே ஒரு பிடி அரிசி கொடுத்தாள். குருவி அதை மற்றொரு பாட்டியிடம் கொடுத்து, வைத்திருக்கும்படி வேண்டிக்கொண்டது. அவள் அதைப் பிச்சைக்காரனுக்குக் கொடுத்துவிட்டாள். இதை அறிந்த குருவி, 'பிடி அரிசிக்குப் படி அரிசி தா' என்று பாட்டியைக் கேட்டது.

4. அவள் ஒரு படி அரிசி கொடுத்தாள். குருவி அதில் பாயசத்திற்காக ஒரு பிடி அரிசியை எடுத்து வைத்துக் கொண்டது. மிகுந்த அரிசிக்குச் சர்க்கரை முதலான சாமான்கள் வாங்கிற்று. பின்பு அது கடைக் காரனிடம் ஒரு பாத்திரத்தையும் இரவலாக வாங்கிக் கொண்டது.

5. குருவி ஒரு குளத்தின் கரையில் பாயசம் சமைத் தது. உடனே அது ஆத்திரமாகத் தன் மூக்கால் பாயசத்தை ருசி பார்க்கத் தொடங்கியது. சூடு அதிகமாக இருந்தது. குருவி கோபம்கொண்டு பாயசத்தைக் குளத் தில் கொட்டிவிட்டது.

6. சிறிது நேரம் கழிந்தபின், குருவி குளத்தின் ஓரத்தில் கிடந்த சில பாயசப் பருக்கைகளைத் தின்றது. அவை தித்திப்பாய் இருந்தன. உடனே குருவி பேராசையோடு குளத்து நீர் முழுதும் குடித்து விட்டது. பிறகு அது சிரமத்தோடு தன் இருப்பிடத்திற்குத் திரும்பியது. அங்கே தான் குடித்த நீரையெல் லாம் வாந்தி செய்தது. அந்த ஜலம் வெள்ளமாகப் பெருகிவிட்டது. அதில் அம்மையார்ப் பாட்டியின் வீடும் ஆடு மாடுகளும் மூழ்கிப் போயின. அப்போது குருவி பறந்துபோய் ஒரு மரத்தின் உச்சியில் உட்கார்ந்து,



'ஆடும் மாடும் குளம் குளம்!
அம்மையார் வீடும் குளம்!

என்று பாடிக்கொண்டிருந்தது.

கேள்விகள்

1. அம்மையார்ப் பாட்டி என்ன சமைத்துச் சாப்பிட்டாள்?
2. அம்மையார்ப் பாட்டி குருவிக்கு என்ன கொடுத்தாள்?
3. அம்மையார்ப் பாட்டி வீடும்,'ஆடுகளும் எப்படி நீரில் மூழ்கின?

## 20. நல்ல பையனும் கெட்ட பையனும்

| | | |
|---|---|---|
| சகோதரர் | குறும்பு | ஆசை |
| துரத்தி | துஷ்டத்தனம் | தொடர்ந்தான் |
| அலறி | வேண்டினுன் | கவனி |
| வாணியன் | விலக | உடைந்தது |
| கோபம் | மீண்டும் | அடங்கவில்லை |
| உதைத்தது | கதறி | வீங்கிற்று |
| உதிர்ந்தன | உதவி | விருப்பம் |

1. பாலன் நல்ல பையன்; நீலன் கெட்ட பையன். இருவரும் சகோதரர்கள். ஒரு நாள் அவர்கள் இருவரும் பள்ளிக்கூடத்திற்குப் போய்க் கொண்டிருந்தார்கள். வழியில் கழுதை ஒன்று போய்க் கொண்டிருந்தது. அதைக் கண்டவுடன் நீலனுக்குக் குறும்பு செய்ய ஆசை உண்டாயிற்று. அவன் பாலனை நோக்கி, “நீ என் புத்தகங்களையும் கற்பலகையையும் சிறிது நேரம் வைத்துக்கொள். நான் இக்கழுதையைச் சிறிது தூரம் துரத்திக்கொண்டு வருகிறேன்” என்று சொன்னுன்.

2. பாலன், “அண்ணு, வேண்டாம். நாம் வழியில் துஷ்டத்தனம் செய்யாமல் பள்ளிக்கூடத்திற்குப் போவதே நல்லது” என்ருன். தம்பி சொன்னதை நீலன் கேட்கவில்லை. அவன் தன் கையிலுள்ள சாமான்களோடு கழுதையைத் துரத்திக்கொண்டே பின் தொடர்ந்தான். ஒரு வீட்டு வாசலில் சில குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன. ஓடி வரும் கழுதையைக் கண்டு, அவை அங்கும் இங்கும் அலறிக்கொண்டு ஓடின.



3. குழந்தைகளைப் பயப்படுத்தியதற்காக, அவ்வீட்டுக்காரர் ஓடி வந்து நீலன் கன்னத்தில் ஓர் அறை அறைந்தார்.

அப்போது, அண்ணனைத் தொடர்ந்து வந்த பாலன், " அண்ணு, இனிமேலாவது துஷ்டத்தனம் செய்யாதே " என்று வேண்டிக் கொண்டான்.

4 ஆனல், நீலன் தம்பி சொன்னதைக் கவனிக்கவில்லை. அவன் மறுபடியும் கழுதையைக் துரத்திக் கொண்டு ஓடினன். அப்போது எதிரே ஒரு வாணியன், தலைமேல் எண்ணெய்க்குடம் வைத்துக்கொண்டு வந்தான். அவன் கழுதைக்கு விலக முயன்றான். அப்பொழுது எண்ணெய்க் குடம் கீழே விழுந்து உடைந்து போயிற்று. இவனும் கோபங்கொண்டு நீலனை அடித்தான்.



5. பாலன் தமையனுக்கு மீண்டும் புத்திசொல்லிப் பார்த்தான். ஆனல் நீலனுடைய துஷ்டத்தனம் இன்னும் அடங்கவில்லை. அவன் ஓடிப்போய்க் கழுதையின் வாலைப் பிடித்து முறுக்கினன். உடனே கழுதை தன் காலைத் தூக்கி அவன் முகத்தில் உதைத்தது. அவன், 'ஐயோ!' என்று கதறிக்கொண்டு கீழே விழுந்துவிட்டான். அவனுடைய கற்பலகை உடைந்துபோயிற்று; புத்தகங்களும் மண்ணில் விழுந்து அழுக்கு அடைந்தன. நீலன் முகம் வீங்கிப்போயிற்று. அவன் பற்களில் சில உதிர்ந்துவிட்டன.

6. இதைப் பார்த்த பாலன் ஓடிவந்து அண்ணனுக்கு வேண்டிய உதவி செய்தான். பிறகு அவன் நீலனை மெள்ள வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

7. பிள்ளைகளே, நீங்கள் நீலனைப் போல இருக்க விரும்புகிறீர்களா ?

### கேள்விகள்

1. பாலனும் நீலனும் யார் ?
2. நீலன் வழியில் கழுதையைக் கண்டு என்ன செய்தான் ?
3. நீலன் துஷ்டத்தனம் பண்ணினதால் அவனுக்கு நேரிட்டது என்ன?

## 21. கிழவனும் மூன்று குமாரர்களும்

| | | |
|---|---|---|
| வயோதிகன் | கடைசி முறை | பாலியன் |
| புத்திமதி | கூடுமான வரை | நொடிக்குள் |
| ஒற்றுமை | பல முறை | இளையவன் |
| மரணகாலம் | அநுபவம் | மூத்தவன் |
| கிட்டியது | யத்தனம் | சச்சரவு |

1. ஓர் ஊரில் ஒரு வயோதிகன் இருந்தான். அவனுக்கு வயது எண்பத்தைந்து இருக்கலாம். அவன் சில மாத காலமாக நோயினுல் கஷ்டப்பட்டான். அவனுக்கு மூன்று குமாரர்கள் உண்டு. அவர்கள் எப்பொழுதும் ஒருவரோடொருவர் சண்டை யிடுவது வழக்கம்: கிழவனுக்கு இது கொஞ்சமும் பிடித்தமில்லை. இவர்கள் ஒற்றுமை இல்லாமல் இருப்பதைப் பார்த்து மிகவும் மனம் வருந்தினுன். எத்தனையோ முறை அவர்களுக்கு நல்ல புத்திமதிகளைச் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை.

2. கிழவன் தனக்கு மரணகாலம் கிட்டியதாகத்தெரிந்தான். ஆகவே தன் குமாரர்களுக்குக் கடைசி முறையாக நல்ல புத்தி கற்பிப்போம் என்று எண்ணினுன். குமாரர்களைத் தன் பக்கத்தில் அழைத்து, "நீங்கள் நமது தோட்டத்துக்குப் போய் ஒரு கட்டுச் சுள்ளி விறகு கொண்டு வாருங்கள்" என்ருன். பிள்ளைகள் தங்களுடைய தந்தை சொன்னபடி விரைவாகத் தோட்டத்துக்குச் சென்று ஒரு கட்டுச் சுள்ளி விறகு கொண்டுவந்து தகப்பன் முன் வைத்தார்கள்.

3. கிழவன் தன்னுடைய குமாரர்களில் மூத்தவனை அழைத்து, "அப்பா! இந்த விறகுக் கட்டை ஒடி" என்ருன். அவன் தன்னுல் கூடுமான வரை முயன்றும் அந்த விறகுக் கட்டை ஒடிக்க முடியவில்லை. கிழவன் இரண்டாவது குமாரனை அழைத்தான். "அப்பா! நீயாவது இந்தக் கட்டை ஒடி" என்று கூறினுன். அவனும் பல முறை ஒடிக்க யத்தனம் செய்தும் அவனுல் ஒடிக்க இயல

வில்லை. அப்பால் கடைசி மகனை அழைத்து, "நீ பாலியனுக் இருக்கிறாய். ஆகையால் நீ இதை ஒடிக்கக் கூடுமென்று எண்ணுகிறேன்" என்றான். அவனும் ஒடிக்க முயன்று, தன் முயற்சியில் வெற்றி அடையவில்லை.

4. கிழவன் இந்த நிலையில் தன் குமாரர்களை நோக்கி, "நீங்கள் இந்தக் கட்டை அவிழ்த்துத் தனித்தனியாக வுள்ள சுள்ளிகளை ஒடியுங்கள்" என்றான். அவர்கள் ஓர நொடிக்குள் ஒடித்துவிட்டார்கள். கிழவனும் தன் கண்ணை மூடி விட்டான்.

5. பிள்ளைகள் கிழவனுக்குச் செய்ய வேண்டிய அடக்கம் முதலிய காரியங்களை முடித்துவிட்டு ஒரு நாள் தமக்குள் பேசிக்கொண்டு இருந்தார்கள். அப்பொழுது இளையவன் தன் மூத்த தமையனிடம், "அண்ணா! நமது தந்தை தான் இறக்கும்போது சுள்ளி விறகுகளைக் கொண்டு வந்து ஒடிக்கச் சொன்னது எதற்காக? எனக்கு விளங்க வில்லையே" என்று கேட்டான்.

6. அப்பொழுது மூத்தவன், "தம்பி! விறகுச் சுள்ளி கள் ஒன்று சேர்ந்திருந்தபோது நம்மால் அதனை ஒடிக்க முடியவில்லை. தனித்தனியாக அவைகளைப் பிரித்ததும் நாம் ஒடித்து விட்டோம். அதுபோல நாம் ஒற்றுமையாக இருந்தால் எவராலும் நம்மைக் கெடுக்க முடியாது. இந்த நீதியை அல்லவா நமது தந்தை வெளிப்படச் சொல்லாமல் அநுபவமாகக் காட்டியிருக்கிறார்" என்றான். சகோதரர் மூவரும் அது முதல் தங்களுக்குள் யாதொரு சண்டை சச்சரவுகள் இல்லாமல் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

கேள்விகள்

1. கிழவன் தனது குமாரர்களுக்கு உபதேசித்த புத்திமதி என்ன?
2. அந்தப் புத்திமதியை எந்த உதாரணத்தால் கற்றுக்கொடுத்தார்?

அப்பியாசம்

ஒரு — ஒரு — இருந்தான்.
அப்பா! — இந்த — கட்டை — என்றான்.
மேற்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தைகளை எழுது.

## 22. நல்லொழுக்கம்

| | | |
|---|---|---|
| டஜன் | அற்பமான | நல்லொழுக்கம் |
| மாத்திரம் | துணிவான் | தீய ஒழுக்கம் |
| விலையுயர்ந்த | மன்னிக்கவும் | வந்தனம் |

கமலம் :—சுந்தரி, நான் என் பேனவைத் தொலைத்து விட்டேன். அப்பா கோபித்துக் கொள்வார். உபாத்தியா யருடைய மேஜையிலிருந்து எனக்கு ஒரு பேன எடுத்துக் கொண்டு வா.

சுந்தரி :—கமலம், அதை அவருடைய உத்தரவில்லா மல் நாம் எடுப்பது சரியா ?

கமலம் :— அவருடைய மேஜைக்குள் ஒரு டஜன் பேனக்கள் இருக்கின்றன. நீ பார்க்கவில்லையா ? அவற் றுள் ஒன்றை மாத்திரம் எடுத்துக் கொண்டால் அவருக்கு என்ன நஷ்டம் ?

சுந்தரி :— கமலம், நீ ஏன் இப்படிச் சொல்லுகிறாய் ? நீ சொன்னபடி செய்தால் அது திருட்டு ஆகும் அல்லவா?

கமலம் :—நாம் விலையுயர்ந்த பொருள்களையா திருடப் போகிறோம் ? பேன ஓர் அற்பமான பொருள் தானே !

சுந்தரி :— கமலம், அற்பத் திருட்டும் குற்றமானது அல்லவா ? அற்பத் திருட்டில் பழகுவோர் பெரிய திருட் டும் செய்யத் துணிவார்கள்.

கமலம் :— உபாத்தியாயர் பார்க்கப்போகிறாரா? அவர் அறிந்தால்தானே அது திருட்டு ஆகும் ?

சுந்தரி :— யார் பார்த்தாலும் பாராவிட்டாலும், திருடு வது குற்றந்தான்.

கமலம் :— சுந்தரி, இனி இப்படிச் செய்யும்படி நான் உன்னைத் தூண்ட மாட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்.

சுந்தரி :— நல்லவர்கள் நல்லொழுக்கத்தையே எப்பொழுதும் விரும்புகிறார்கள். திருட்டு, பொய் முதலியன தீய ஒழுக்கங்கள். தீய ஒழுக்கங்கள் உள்ளவர்களுக்கு எப்பொழுதும் துன்பந்தான்.

கமலம் :— சுந்தரி, இனி நான் தீய ஒழுக்கத்திற்குச் சிறிதும் இடம் கொடுக்கமாட்டேன். நீ எனக்குப் புத்தி சொன்னதற்காக வந்தனம்.

### கேள்விகள்

1. கமலம் என்ன செய்யும்படி சுந்தரியைத் தூண்டினாள்?
2. சுந்தரி என்ன பதில் சொன்னாள்?
3. அற்பப் பொருளையும் திருடக் கூடாதென்று சுந்தரி சொல்லக் காரணம் என்ன?

### அப்பியாசம்

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வாக்கியங்களில், இரண்டு வாக்கியங்களைச் சேர்த்து ஒரு வாக்கியமாக எழுதுக :—

1. நான் ஒரு புஸ்தகம் வாங்கினேன்.
   நான் ஒரு சிலேட்டு வாங்கினேன்.
2. இது ஒரு அழகான வீடு.
   இது ஒரு பெரிய வீடு.
3. ஒரு குளத்தில் இரண்டு அன்னங்கள் வசித்தன.
   ஒரு குளத்தில் ஒரு ஆமை வசித்தது.

| | |
|---|---|
| நான் பாடம் படிக்கிறேன்<br>என் தொழில் படித்தல்<br>இராமன் சோறு உண்கிறான்<br>இராமன் தொழில் உண்ணுதல் | ஆகவே படிக்கிறேன், உண்கிறான் என்பன வினைச்சொல். |

இவைகளைப் போல இரண்டு வாக்கியங்கள் எழுதி, வினைச்சொற்களைக் குறிப்பிடு.


1
2
3
4
5

## 23. மரம் சாக்ஷியானது

| | | |
|---|---|---|
| ஏமாறுதல் | நீதிபதி | மருந்துகள் |
| அயல் தேசம் | சிறைவாசம் | பெருமை |
| சம்பாதித்தல் | ஏமாற்றுதல் | நியாய ஸ்தலம் |
| ஏராளமான | பித்தம் | அதட்டுதல் |
| க்ஷேம லாபம் | வைத்தியர் | சாக்ஷி |
| | தீர்ப்பு. | |

1. அழகாபுரி என்ற ஊரில் கோபாலன் என்னும் இளைஞன் ஒருவன் இருந்தான். அவனுடைய தந்தை இறக்கும்போது அவனுக்கு ஆயிரம் ரூபாய் சேர்த்து வைத்திருந்தார். கோபாலன் அயல் தேசங்களுக்குப் போய், ஏராளமான செல்வம் சம்பாதிக்க வேண்டுமென்று எண்ணினன். தன்னிடமுள்ள ஆயிரம் ரூபாயையும் என்ன செய்வது என்று அவனுக்கு ஒன்றும் தோன்ற வில்லை.

2. அவன் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒரு கிழவன் இருந்தான். அவனுக்கு ஏராளமான நிலங்கள் வீடுகள் எல்லாம் உண்டு. அவன் தன் வீட்டுத் தோட்டத்தில் ஒரு மரத்தடியில் நின்று கொண்டு இருந்தான். கோபாலன் அவனிடம் போய், “ஐயா பெரியவரே! நான் அயல் தேசம் போக வேண்டியதிருக்கிறது. என்னிடம் இருக்கும் ஆயிரம் ரூபாயையும் நான் திரும்பிவரும் வரை காப்பாற்றி வைத்திருங்கள். நான் வந்ததும் பெற்றுக்கொள்ளுகிறேன். எனக்கு இந்த உதவியைத் தாங்கள் செய்ய வேண்டும்” என்று கேட்டுக்கொண்டான். கிழவனும் அவ்விதமே செய்வதாகச் சம்மதிக்கவே, கோபாலன் தன் பணத்தை அவனிடம் கொடுத்துவிட்டு அயல் தேசம் போய்விட்டான்.

3. கோபாலன் மூன்று வருஷம் கழித்துத் தன் ஊருக்கு வந்தான். தனக்கு உபகாரம் செய்த கிழவனைக் காணச்

சென்று, அவனுடைய க்ஷேம லாபங்களை யெல்லாம் விசாரித்தான். இவ்வாறு சிறிது நேரம் பேசி விட்டு முடிவில் தன் பணத்தைத் தரும்படி கிழவனிடம் கேட்டான். கிழவனோ, "பணமேது? கிணமேது? உனக்கென்ன பித்தம் தலைமேல் ஏறிவிட்டதா? வைத்தியரிடம் போய் நல்ல மருந்துகள் வாங்கிச் சாப்பிடு, போ" என்று சொன்னான். கோபாலன், 'பெரியவரே! இதென்ன காரியம்? ஒன்றும் தெரியாதவர் போலப் பேசுகிறீரே. உம்முடைய வயதுக்கும் பெருமைக்கும் இது பொருத்தமான செய்கை அன்று. தயவுசெய்து பணத்தைக் கொடுத்து விடும். இல்லாவிடில் வீணாக நாம் நியாயஸ்தலத்திற்குப் போக நேரிடும்" என்றான். ஆனால் கிழவன், "அடே, வீண் பொய் வார்த்தைகளைப் பேசாதே. உன்னாலானதைப் பார். என்னாலானதை நானும் பார்க்கிறேன். ஓடிப்போ. இங்கே நில்லாதே" என்று அதட்டிப் பேசினான்.

4. கோபாலன் உடனே நீதி ஸ்தலத்தில் போய் இந்த வழக்கை முறை யிட்டான். நீதிபதி ஒரு சேவகனை அழைத்துக் கிழவனைக் கூட்டிக்கொண்டு வரச் சொன்னார். கிழவன் வந்ததும், நீதிபதி, "கிழவனாரே! நீர் இவரிடம் பணம் வாங்கினது உண்டா?" என்று கேட்டார். கிழவன் தான் யாதொரு பணமும் வாங்கவில்லை யென்று மறுத்து விட்டான்.

5. நீதிபதி, கோபாலனை நோக்கி, "உனக்குச் சாக்ஷி உண்டா?" என்று கேட்டார். கோபாலன், "நான் இந்தப் பெரியவர் வீட்டுத் தோட்டத்தில் மரத்தடியில் வைத்து இவரிடம் பணம் கொடுத்தேன். எனக்குச் சாக்ஷி யாரும் இல்லை" என்றான். நீதிபதி "அப்படியானால் நீ போய் நான் அழைத்துக்கொண்டு வரச் சொன்னதாக மரத்தினிடம் சொல். அந்த மரம் தானே வரும்: போ" என்று கோபாலனிடம் சொல்லி யனுப்பினார். கோபாலன் அவ்விதமே சென்று மரத்தை அழைத்தான். மரம் அசையாமல் நின்ற இடத்திலே நின்றது.

6. கோபாலன் திரும்புவதற்குள் நீதிபதி கிழவனை நோக்கி, "கோபாலன் இந்நேரம் மரத்தண்டை போயிருப்பானு?" என்று கேட்டார். கிழவன், "அந்த மரம் எவ்வளவு தூரத்திலிருக்கிறது! இதற்குள் அவன் எப்படிப் போக முடியும்?" என்றுன். இந்தச் சமயம் கோபாலன் திரும்பி வந்து நீதிபதியிடம், "ஐயா, தாங்கள் சொல்லியதைச் சொல்லி மரத்தை அழைத்தேன். மரம் நின்றபடியே நிற்கின்றது. நான் தங்களிடம் திரும்பி வந்துவிட்டேன்" என்றுன்.

7. நீதிபதி அவனைப் பார்த்து, "நீ போயிருக்கும் போது அந்த மரம் இவ்விடம் வந்து சாக்ஷி சொல்லிப் போய்விட்டது" என்று சொல்லிக் கிழவனை நோக்கி, "நீ கொடுத்த வாக்குமூலமே நீ பணம் வாங்கினுய் என்பதை நிருபித்துவிட்டது. உடனே கோபாலனிடம் பணத்தைக் கொடுத்துவிடு. அன்றியும் நீ பொய் சொல்லி ஏமாற்றிய குற்றத்திற்காகப் பத்து மாதம் சிறை வாசமும் செய்ய வேண்டும்" என்று தீர்ப்புக் கூறினுர்.

8. கிழவன் பொய் சொன்னதனுல் பத்து மாதம் சிறை சென்று விட்டு வீடு வந்தான்.

### கேள்விகள்

1. கோபாலன் தன்னிடமுள்ள ஆயிரம் ரூபாயை என்ன செய்தான்?
2. கோபாலன் அயலூர் போய்த் திரும்பிக் கிழவனிடம் ரூபாய் கேட்டதற்குக் கிழவன் சொன்ன பதில் என்ன?
3. கோபாலனுக்கு மரம் எப்படிச் சாக்ஷி சொல்லியது?

### அப்பியாசம்

கீழ்க்கண்ட வார்த்தைகளில் பொருத்தமானவைகளைக் கோடிட்ட இடங்களில் அமைத்து எழுது.

| | | |
|---|---|---|
| உயரமான | ஏராளமான | ஆழமான |
| அழகான | இனிமையான | சூடான |

1. கோபாலன்...........பொருள் சம்பாதிக்க விரும்பினுன்.
2. நான் ஒரு ...........குதிரை வாங்கினேன்.
3. ........... பால் கொண்டுவா.
4. தோட்டத்தில் ........... மரங்கள் வளர்ந்திருக்கின்றன.
5. தோட்டத்தில் ஒரு ........... கிணறு இருக்கிறது.
6. பாலன் ........... பாட்டுப் பாடினுன்.



## 24. புத்தியில்லாத ஆமை

| | | |
|---|---|---|
| அன்னப் பறவை | தோழர்கள் | மாளுதல் |
| உல்லாசம் | கௌவுதல் | இரைச்சல் |
| வேடிக்கை | நடு வழி | இறகு |
| ஆச்சரியம் | இருமுனை | இதழ்கள் |
| காரணம் | ஆகாயம் | நீந்துதல் |
| நேரிடுதல் | கூச்சல் | வினவின |
| வறண்டு போதல் | கூக்குரல் | நுனி |
| ஆமை | அந்தோ | கழி |
| கம்பு | முளைத்தல் | |

1. ஓர் குளத்தில் இரண்டு அன்னப் பறவைகள் வசித்து வந்தன. அக்குளத்தில் தாமரை, அல்லி முதலியன முளைத்து அக்குளத்தை அழகுபடுத்தின. அன்னப் பறவைகள் தாமரை இதழ்களைத் தின்றும், தாமரை இலைகளில் படுத்து உறங்கியும் காலங் கழித்து வந்தன.

அத்தடாகத்தில் ஓர் ஆமையும் வாழ்ந்து வந்தது. அன்னப் பறவைகள் அந்த ஆமையுடன் வெகு சிநேக மாக இருந்தன. அவை மூன்றும் தண்ணீரில் உல்லாசமாக நீந்தியும், வேடிக்கையாகப் பேசியும் நேரம் போக்கி வந்தன.

2. ஓர் சமயம் பல மாதங்கள் மழை பெய்யாது ஒழி யவே அத்தடாகத்தில் உள்ள தண்ணீர் வற்ற ஆரம்பித்தது. இன்னும் சில நாட்களில் குளம் வறண்டு போகும் என்பதை அன்னப் பக்ஷிகள் அறிந்து கொண்டன. ஓர் நாள் அவை ஆமையை நோக்கி, "நண்பா, இக்குளத்தில் தண்ணீர் குறைந்து கொண்டு வருகிறது. இனிமேல் இக்குளத்தில் நாங்கள் தங்கியிருக்க முடியாது. ஆகையால் நாங்கள் வேறொரு தடாகத்துக்குச் செல்வதாகத் தீர்மானி துள்ளோம். நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று வினவின.

3. ஆமை, "தோழர்களே, நீங்கள் உங்கள் இறகு களின் உதவியால் பறந்து செல்லக்கூடும். எனக்கு அவ்வாறு பறந்து செல்ல இறகுகள் இல்லை. விரைவாக நடந்து செல்வதற்கு ஏற்ற நீண்ட கால்களும் இல்லை. என் குறுகிய கால்களின் உதவியால் நான் மிகவும் மெது வாகவே நகர்ந்து செல்லக்கூடும். உங்களைப் பிரிந்திருக்க எனக்கு மனமுமில்லை. நீங்கள் எவ்விதமாகவாவது, என்னையும் அழைத்துச் செல்லாவிட்டால் நான் என் வாழ்நாட்களைச் சந்தோஷமாகப் போக்க முடியாது" என்றது.

4. அன்னங்கள் ஆமையைச் சுமந்து செல்ல ஒரு யோசனை செய்தன. அவை ஒரு சிறிய கம்பைக் கொண்டு வந்து ஆமையின் முன் வைத்து, "நண்பா, இந்தக் கழியை நீ பலமாகக் கௌவிக் கொள்ள வேண்டும். நாங்கள் அக்கொம்பின் நுனிகளை, ஆளுக்கு ஒரு புறமாகப் பற்றிக் கொண்டு தூக்கிச் செல்வோம்.. வழியில் நீ எக்காரணம்

பற்றியும் வாய்திறக்கக் கூடாது. வாய்திறந்தால் உன் கதி என்ன ஆகும் என்பதை நீயே யோசித்துக்கொள்” என்றன. அதற்கு ஆமை, “நடுவழியில் வாயைத்திறந்தால் கீழே விழுந்து உயிரை இழப்பேன். இது எனக்குத் தெரியாதா?” என்று கூறிக் கழியின் நடுப்பாகத்தைப் பலமாகக் கௌவிக் கொண்டது,

5. அன்னப் பறவைகள் கொம்பின் இரு முனைகளையும் பற்றிக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பிப் பறந்து சென்றன. அவை மலைகளையும், காடுகளையும், நாடுகளையும் கடந்து சென்று கொண்டிருந்தன. அவை ஓர் ஊரின் மேலாகப் பறந்து செல்லுகையில் கீழே நின்று கொண்டிருந்த ஜனங்கள் அன்னப் பறவைகள் ஆமையைத் தூக்கிச் செல்வதைப் பார்த்தனர். அவர்கள் ஆச்சரியமுற்று, “ஆ, இது என்ன புதுமை!” என்று கூறி, இரைச்சலிட்டனர். அன்னங்கள் ஜனங்கள் போட்ட கூச்சலைச் சிறிதும் கவனியாது பறந்தன. ஆனால், ஆமை அந்தக் கூக்குரலின் காரணம் யாது என்று அன்னங்களிடம் கேட்கும் பொருட்டுத் தன் வாயைத் திறந்தது. அந்தோ! அது உடனே தரையில் விழுந்து மாண்டது. இதைக் கண்ணுற்ற அன்னப் பறவைகள் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டே பறந்து சென்றன. அன்னப் பக்ஷிகள் கூறியபடி ஆமை தன் வாயைத் திறவாமல் இருந்திருந்தால் அதற்கு இக்கதி நேரிட்டிராது அன்றோ!

### கேள்விகள்

1. குளத்தில் இரண்டு அன்னப் பறவைகளுடன் எது வாழ்ந்து வந்தது?

2. அன்னப் பறவைகள் ஏன் குளத்தைவிட்டுப் பிரிய எண்ணின?

3. அன்னப் பறவை வேறிடத்துக்குச் செல்லும்போது கூடப் போன ஆமையின் கதி என்னவாயிற்று?

ஆமையைப் ‘புத்தியில்லாத ஆமை’ என்று சொல்வது எவ்விதம் பொருந்தும்?

## 25. சோம்பேறிச் சோமாசி

| | | |
|---|---|---|
| சிதறி விடுதல் | கண்ணைக் கட்டு | முன்தானை |
| தூக்கம் | கூலிப் பணம் | சிந்தி விடுதல் |
| சோம்பேறி | குலுங்குதல் | கலயம் |
| தூங்கு மூஞ்சி | முட்டாள் | வெண்ணெய் |
| ஓயாத | நழுவுதல் | பொறுமை |
| புத்திமதி | இளித்தல் | செவிடு |
| எரிச்சல் | மேய்ப்பவர் | மயக்கம் |
| கடினம் | தொந்தரவு | வெருகுப் பூனை |

1. சோமாசி என்றொரு தூங்கு மூஞ்சி இருந்தான். அவனுக்கு எப்போதும் ஓயாத் தூக்கம். சாப்பிடும்போது கூடத் தூங்கிக் கொண்டேதான் சாப்பிடுவான்.

2. அவன் தாயாருக்கு அவனைப் பற்றிப் பெருத்த கவலை. அவள் அடிக்கடி அவனுக்குப் புத்திமதி கூறுவாள். ஆனல் அவள் வார்த்தை அவன் காதில் படுமுன்பே அவன் தூங்கிவிடுவான்.

3. தாயாருக்கு ஒரு நாள் எரிச்சலும் கோபமும் வந்தது. தூங்கிக்கொண்டிருந்த அவனது இரண்டு காதுகளையும் பிடித்துத்தூக்கி நிறுத்தி, "நீ வேலை செய்வாயா, மாட்டாயா?" என்றாள். என்றுமில்லாத இவ்வளவு கோபத்தைக் கண்டதும் சோமாசியின் தூக்கம் பறந்து போயிற்று. "நான் இதோ வேலை செய்யப் போகிறேன்" என்று புறப்பட்டான்.

4. முதல் நாள் ஒரு உழவனிடம் சோமாசி வேலை செய்தான். வேலை கடினமாயிருந்ததால் தூக்கம் வரவில்லை; ஆனல் சாயங்காலம் வீட்டுக்கு வருகையில் தூக்கம் கண்ணைக் கட்டிற்று. மயக்கத்தில் கையில் வைத்திருந்த கூலிப் பணம் நழுவி விழுந்துவிட்டது. தாயார், "அடா, முட்டாள், கூலிப் பணத்தை முன் தானையில் முடிய வேண்டுமென்று என் தெரியவில்லை" என்று கோபித்தாள். சோமாசி பல்லை இளித்துக்கொண்டு, "சரி, இப்போது தெரிந்து விட்டது" என்றான்.

5. மறு நாள் மாடு மேய்ப்பவன் ஒருவனிடம் வேலை கேட்டான். அவன் ஒரு பெரிய மாட்டைக் கொடுத்து மேய்க்கச் சொன்னான். மாடு முன்னும் பின்னும் வெட்டி வெட்டி யிழுத்து, அவனைத் தொந்தரவு பண்ணியதால் அன்றைக்கும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. சாயங் காலம் மாடு மேய்ப்பவன் ஒரு மண் கலயம் நிறையப் பால் கொடுத்தான். சோமாசி அதை முன் தானையில் கட்டிக் கொண்டு வந்தான். வீட்டிற்கு வருவதற்குள் பால் அவ்வ ளவும் சிந்திவிட்டது. வெறும் கலயம் மட்டும் இருந்தது. தாயார், 'அடா மட்டி' பால் கலயம் தலை மேல் வைத்துக் கொண்டு வரவேண்டும் என்பதுகூட உனக்குத் தெரி யாதா?' என்று கோபித்தாள். சோமாசி, "இப்போது தெரிந்தது" என்றான்.

6. மூன்றாம் நாள் ஒரு இடையனிடம் வேலை பார்த்த தில் கொஞ்சம் வெண்ணெய் கூலியாக அவனுக்குக் கிடைத் தது. அதைத் தாய் சொன்னபடி தலையில் வைத்துக் கொண்டு வந்தான். வெண்ணெய் உருண்டை அடிக்கடி நழு விக் கீழே விழுந்தது. மறுபடியும் மறுபடியும் அதை எடுத் துத் தலையில் வைத்துக்கொண்டான். ஒவ்வொரு தடவை யும் மண்ணுடன் சேர்ந்து வீட்டுக்கு வருகையில் அது மண்ணாகவே இருந்தது. தாயார் இதைப் பார்த்து வயிறு எரிந்து, "அடடா! வெண்ணெயை இலையில் மடக்கிக் கையில் வைத்துக்கொண்டு வரவேண்டு மென்று கூடத் தெரியாதா?" என்றாள். சோமாசியும் மன வருத்தத்துடன், "இனித் தெரியும், அம்மா" என்றான்.

7. மறு நாள் ஒரு வேடனிடம் வேலை பார்த்து வெரு குப் பூனைக் குட்டி ஒன்றைப் பெற்றான். கடைசித் தடவை தாய் சொன்னதை மறவாமல் பூனைக் குட்டியை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு வந்தான். ஆனால் அது கைகளை வாயால் கடித்தும், நகத்தால் கிழித்தும் அவனை வருத்தியது. ஆயினும் தாய் சொல் மீறப்படாதென்று பொறுமையுடன் வந்தான். தாயார் இதைக் கண்டதும்

வயிற்றிலடித்துக் கொண்டு, "நீ எனக்கு இப்படியா வந்து சேர்ந்தாய்? வெருகுப் பூனைக்குட்டியைக் கழுத்தில் கயிறு போட்டுக் கட்டிவர வேண்டுமென்று தெரியாதா"? என்றாள். சோமாசி, "அடுத்த தடவை தவறமாட்டேன்" என்றான்.

8. பின்பு ஒரு நாள் மிட்டாய்க் கடைக்காரனிடம் வேலைபார்த்து, ஒரு ஜாடி மிட்டாய் கூலியாகப் பெற்றான். ஜாடியின் கழுத்தில் கயிறு கட்டி அதை இழுத்து வந்ததால் ஜாடி உடைந்து மிட்டாய் சிதறிவிட்டது. தாயார் இதைத் தலையில் வைத்துக்கொண்டு வந்தால் என்ன?" என்றாள். சோமாசி, "இனி அப்படியே" என்றான்.

9. கடைசியாக வண்ணான் ஒருவனிடம் வேலை பார்த்து ஒரு கழுதையைக் கூலியாகப் பெற்றான். அதைத் தலையில் வைத்துத் தூக்கிக்கொண்டு வந்தான்.

10. அந்நாட்டு அரசன் மகளுக்கு வியாதியா யிருந் தது. வியாதியால் அவள் ஊமையாகவும் செவிடாகவும் போய்விட்டாள். அவளை யாராவது சிரிக்கப் பண்ணினால் அவள் குணமடைவாள் என்று வைத்தியன் சொல்ல அரசனும் அப்படிச் சிரிக்கச் செய்பவனை அரசனுக்கி மகளையும் மணம் செய்விப்பதாகப் பறை அடித்திருந்தான். சோமாசி கழுதையைத் தூக்கிக்கொண்டு போவதைக் கண்டதும் அவள் குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். அவள் குணப்பட்டாள். அரசன் சோமாசியை அரசனுக்கி, மகளை யும் மணம் செய்து கொடுத்தான். சோமாசி அது முதல் அறிவுடையவனாக வாழ்ந்தான்.

### கேள்விகள்

1. சோமாசி என்பவனுக்கு மறு பெயர் என்ன?
2. சோமாசியின் தாயார் அவனுக்குப் புத்திமதி கூறும்போது அவன் என்ன செய்வான்?
3. சோமாசிக்கு வந்த அதிருஷ்டம் என்ன?

### அப்பியாசம்

சோமாசிக்குப் பழக்கமாயிருந்த தூக்கம் எவ்விதம் போனது என்பதைக் குறித்து எழுது.

# ஆத்தி சூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இளமையிற் கல்.
4. இயல்பு அலாதன செயேல்.
5. ஈவது விலக்கேல்.
6. உடையது விளம்பேல்.
7. உத்தமன் ஆயிரு.
8. ஊக்கமது கைவிடேல்.
9. ஊருடன் கூடிவாழ்.
10. எண்ணெழுத் திகழேல்.
11. ஏற்பது இகழ்ச்சி.
12. ஐயம் இட்டு உண்.
13. ஓதுவது ஒழியேல்.
14. ஔவியம் பேசேல்.
15. கண்டொன்று சொல்லேல்.
16. கீழ்மை அகற்று.
17. குணமது கைவிடேல்.
18. கூடிப் பிரியேல்.
19. கெடுப்பது ஒழி.
20. கேள்வி முயல்.
21. கொள்ளை விரும்பேல்.
22. சான்ரோர் இனத்திரு.
23. சுளிக்கச் சொல்லேல்.
24. சூது விரும்பேல்.
25. செய்வன திருந்தச் செய்.
26. சேரிடம் அறிந்து சேர்.
27. சோம்பித் திரியேல்.

28. தந்தைதாய்ப் பேண்.
29. தீவினை அகற்று.
30. துன்பத்திற்கு இடம் கொடேல்.
31. தூக்கி வினைசெய்.
32. தெய்வம் இகழேல்.
33. தேசத்தோடு ஒத்துவாழ்.
34. நன்றி மறவேல்.
35. நன்மை கடைப்பிடி.
36. நாடு ஒப்பன செய்.
37. நூல் பல கல்.
38. நெற் பயிர் விளை.
39. நோய்க்கு இடம் கொடேல்.
40. பருவத்தே பயிர் செய்.
41. பிழைபடச் சொல்லேல்.
42. பூமி திருத்தி உண்.
43. பெரியாரைத் துணைக்கொள்.
44. பொருள்தனைப் போற்றி வாழ்.
45. மனம் தடுமாறேல்.
46. மீதூண் விரும்பேல்.
47. மூர்க்கரோடு இணங்கேல்.
48. மேன்மக்கள் சொற்கேள்.
49. மொழிவது அறமொழி.
50. வல்லமை பேசேல்.
51. வித்தை விரும்பு.
52. வெட்டெனப் பேசேல்.
53. வைகறைத் துயில் எழு.

# கொன்றை வேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
கிட்டா தாயின் வெட்டென மற.
கீழோர் ஆயினும் தாழ உரை.
கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.
சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.
சூதும் வாதும் வேதனை செய்யும்.
தந்தைசொல் மிக்க மந்திர மில்லை.
தாய்சொல் துறந்தால் வாசகம் இல்லை.
திரைகட லோடியும் திரவியம் தேடு.
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
நூல்முறை தெரிந்து சீலத் தொழுகு.

மாரி அல்லது காரியம் இல்லை.
மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது.
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்.
வீரன் கேண்மை கூர் அம்பாகும். 25.
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
தீராக் கோபம் போராய் முடியும்.
தோழ னோடும் ஏழைமை பேசேல்.
நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும். 30.
நீரகம் பொருந்திய ஊரகத் திரு.
நெஞ்சை ஒளித்தொரு வஞ்சக மில்லை.
நைபவ ரெனினும் நொய்ய உரையேல்.
பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.
பாலோ டாயினும் காலம் அறிந்துண். 35.
புலையும் கொலையும் களவும் தவிர்.
பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.
மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.
ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு. 39.

ஹிலால் பிரஸ்
திருநெல்வேலி